விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 183 வள்ளுவர் ஆண்டு 2057 ஆனி 06 சனிக்கிழமை (20.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## தவறிழைத்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

### செம்மணியைப் பார்வையிட்ட பின் காணாமல் போனோர் அலுவலகத்தின் ஆணையாளர்



(யாழ்ப்பாணம்)

தவறிழைத்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதே காணாமல் போனோர் அலுவலகத்தின் முதன்மை நோக்கம் என காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழிப் பகுதியை நீதி அமைச்சருடன் பார்வை

15ஆம் பக்கம் பார்க்க

## - தமிழ் மக்களை ஏமாற்றமாட்டோம் -

## செம்மணிப் புதைகுழி தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும்

### புதைகுழியைப் பார்வையிட்ட பின் நீதி அமைச்சர்



(யாழ்ப்பாணம்)

கடந்தகால அரசாங்கம் போல தமிழ் மக்களை ஏமாற்றமாட்டோம். செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதி நிலைநாட்டப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

செம்மணி மனிதப்

15ஆம் பக்கம் பார்க்க

### நீதி அமைச்சருக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# ஏ 9 வீதியை மறித்து உறவுகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஏ9 வீதியை வழிமறித்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)




## நெடுந்தீவுக் கடலில் காணாமல் போனவர்

### நாகப்பட்டினத்தில் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்று காணாமல் போயி

15ஆம் பக்கம் பார்க்க

## க.பொ.த சாதாரண தர பெறுபேறுகள் வெளியாகின

(கொழும்பு)

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று இரவு வெளியிடப்பட்டுள்ளன.

2025ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையானது, கடந்த 2026 பெப்ரவரி

15ஆம் பக்கம் பார்க்க

## செம்மணியில் நேற்றும் 7 என்புக்கூடுகள் அடையாளம்



15ஆம் பக்கம் பார்க்க

## தமது காணிகளை விடுவிக்கக் கோரி வலி. வடக்கு மக்கள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்குப் பகுதிகளில் உயர் பாதுகாப்பு வலயமாகவுள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி காணி உரிமையாளர்கள் இராணுவத்தினரின் "கொமோண்டோ "பங்களா முன்பாக நேற்று ஒன்பதாவது வெள்ளிக்கிழமையாக போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

14ஆம் பக்கம் பார்க்க



## படையினருக்கு மக்கள் காணிகளை வழங்குவதை ஏற்க முடியாது

### யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

(யாழ்ப்பாணம்)

காணிப்பயன்பாட்டுக் குழுக்கூட்டங்களை மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தப்படாமல் நடத்தி பாதுகாப்புப் படையினருக்கு இரகசியமாக மக்கள் காணிகளை வழங்குவது ஏற்க முடியாத விடயம் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில்

15ஆம் பக்கம் பார்க்க

## பண்ணையில் விபத்து இளைஞன் உயிரிழப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற வாகன விபத்தில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இதில் அச்சுவேலி பாரதி வீதிப் பகுதியைச் சேர்ந்த சஞயன் (வயது22) என்ற இளைஞனே

15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நல்வழி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபாய் 7 ½ கோடி பெறுமதியான

# குஷ் போதைவஸ்துடன் ஒருவர் அதிரடிக் கைது

(கொழும்பு)

ஏழு கோடியே ஐம்பது லட்சம் பெறுமதியான குஷ் போதைப் பொருளை நாட்டுக்குள் கடத்தி வந்த நபர் ஒருவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த 41 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்தின் பாங்கொக் நகரிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வந்திருந்த இவரிடம் நடத்திய சோதனையின் போது, அவரது பயணப் பையினுள் நுணுக்கமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 07 கிலோ 500 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக விமான நிலையப் பொலிஸ்போதைப் பொருள் ஒழிப்புப் பிரிவு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ம-7)




கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் - யாழ்கிளை

அறநெறிப் பாடசாலை

நடாத்தும்

மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வு

அழைப்பு

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம் : 20.06.2026 சனிக்கிழமை பி.ப 3.00 மணி

"மூதறிஞர்" "கலாநிதி" வைத்தீசுவரக்குருக்கள் அரங்கு

நிகழ்வுகள்

- சொற்பொழிவு : வரணியூர் - சைவப்புலவர் சி.கா.கமலநாதன் அவர்கள் (சிரேஷ்ட விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) தலைவர், அகில இலங்கை சைவப்புலவர்)
  தலைப்பு : "கைதான் நெகிழவிடேன்"
- இசைக் கச்சேரி : "முதுகலைமாணி" குகேந்திரன் அனுசன் குழுவினர்
- கலாமன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள்:- (பேச்சு, குழு இசை, வீணையில் திருவாசகத் தேனிசை, நாட்டியார்ப்பணம்)

சிறப்பு நிகழ்ச்சி

- வில்லிசை : கலைவாணர் வில்லிசைக்குழு சின்னமணியின் சிஷ்யன் "கலாவித்தகர்" "வில்லிசைத்தென்றல்" A.N.மதியழகன்குழுவினர் வழங்கும் "அருணகிரிநாதர்"
- பரிசில்வழங்கல்:- மூதறிஞர்" "கலாநிதி" வைத்தீசுவரக்குருக்கள் ஞாபகார்த்தமாக நடைபெற்ற திருவாசக மனனம் மற்றும் பேச்சுப் போட்டிகளில் பெற்றி பெற்ற மாணவர்களுக்கான பதக்கம், பரிசில், சான்றிதழ் வழங்கல்.

குறிப்பு: இந்நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து (இல.432, வண்ணை சிவன் கோவில் அருகாமை கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்) பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும். (C-5878)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிழவன்காடு கலாமன்றம் காரைநகர் - யாழ்கிளை



## பணியாளர் தேவை

எமது நிறுவனமான உல்லாசப் பயணிகள் விடுதிக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்கள் தேவையாக உள்ளனர்.

- சமையல் உதவியாளர்
- காவலாளி
- Bil Clerk
- (3 மொழிகளும் தெரிந்தவர் பெண் பணியாளர் விரும்பத்தக்கது)

(C-5877)

077 601 6310, 077 243 1310

இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.



## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்குப் பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத் தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தைப் பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில். (C-5876)

074 196 4945, 076 682 7368

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியின் கல்வி வரலாற்றில் பொன்னெழுத்துக்களில் பொறிக்கப்பட்ட மகத்தான சாதனை

9A சாதனை நிகழ்த்திய மாணவன்

MUHAMMAD JAWZY MOHAMMAD SHIFAAQ

வாழ்த்துவோர்:-

கலாபூஷணம் பரீட் இக்பால்

- யாழ்.முஸ்லிம் சமூக ஊடகம்

(C-5880)



## மணிவிழா வாழ்த்துக்கள்



Best Wishes

### உயர்திரு.அமரசிங்கம் கேதீஸ்வரன்

(பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்
மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி,
கல்வி விருத்தி அறக்கட்டளைத் தலைவர்- பச்சிலைப்பள்ளி)

அகவை அறுபது காண்கின்ற எங்கள் தலைவனே
அமரசிங்கம் தம்பதிகளின் இளஞ்சிங்கமே
செம்மையான திட்டமிடலின் சீராளனே
பல்துறையின் ஆளுமையின் சிகரமே
தேமதுர தமிழின் முத்தமிழ் வித்தகனே
சமூகப் பணியின் சக்கரமாய் நம்மையெல்லாம்
இணைத்து சாகசங்கள் செய்யும் சாதுரியனே
அன்பானவனே பண்பானவனே
அகவை அறுபது தின வாழ்த்துக்களை
வழங்குவதில் பெருமிதம் அடைகின்றோம்
வாழ்க பல்லாண்டு வாழிய வாழியவே!
ஒப்விலும் நிறைவாக வாழ
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அகமகிழ்ந்து வாழ்த்துவோர்:- பச்சிலைப்பள்ளி கல்வி விருத்தி அறக்கட்டளை நிர்வாக சபை, பளை

(C-5879)



சுழிபுரம் - பறாளாய்

## ஈசுர விநாயகர் தேர்த் திருவிழா



காலம் : 21.06.2026 நாளை ஞாயிற்றுக்கிழமை

நேரம் : மு.ப 11.30 மணியளவில்

பஞ்சமுக அருச்சனை காலை 8.45 மணிக்கு

விசேட வசந்த மண்டப பூஜை காலை 10 மணிக்கு

மஹோற்சவ குரு : "வித்தியாசாகரம்" சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் அவர்கள்
(ஸ்ரீ சரஸ்வதி அம்பாள் உபதேசத் திருக்கோவில், சண்டிலிப்பாய்)

(C-5870)

சோழியூரான் பிறைசூடிக்குருக்கள் அன்னார் வாரிசும் சந்ததிப்பு சகரும், பரம்பரைப் பரிபாலகரும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்.போதனா வைத்தியசாலை

# தேசிய வைத்தியசாலையாக தரமுயர்த்த அரசு விரைந்து செயற்பட வேண்டும்

### பணிப்பாளர் சத்தியமூர்த்தி கோரிக்கை



**(யாழ்ப்பாணம்)**

**யாழ். போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக தரம் உயர்த்த அரசு முழுமூச்சுடன் செயற்பட வேண்டும் என அதன் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்.போதனா வைத்தியசாலை தேசிய வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்டால் இலங்கையில் நான்காவது தேசிய வைத்தியசாலை என்ற பெருமையைப்பெறும்.

இதற்கு 1500 கட்டில் வசதிகளைக் கொண்ட எமது வைத்தியசாலை 2000 கட்டில்களைக் கொண்டதாக இருக்க வேண்டும்.

மேலாக கட்டிட மற்றும் பௌதீக வளங்கள் மிக முக்கியமானவை.

எனவே யாழ்.போதனா வைத்தியசாலையை தேசிய வைத்தியசாலையாக்கும் திட்டத்தை அரசு விரைந்து செயற்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார். (நி-க)

# 30 ஆயிரம் புதிய ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்க நடவடிக்கை

### பிரதமர் தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் வரலாற்றில் முன்னெடுக்கப்படும் மிகப்பெரிய ஆசிரியர் நியமனத் திட்டத்தின் கீழ், இந்த ஆண்டில் மாத்திரம் சுமார் 30,000 புதிய ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாகப் பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் உள்ள வடமத்திய மாகாண கல்வி அதிகாரிகளுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விசேட நியமனத் திட்டத்தின் கீழ் கல்வித் துறையின் பல்வேறு பிரிவுகளுக்குப் புதியவர்கள் உள்வாங்கப்படவுள்ளதாகப் பிரதமர் தெரிவித்தார்.

அதன்படி 23,000 பட்டதாரிகளும் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி பெற்ற 6,100 ஆசிரியர்களும், கல்விக்கான பிரத்தியேகப் பட்டங்களை முடித்த பட்டதாரிகளும் இதில் உள்வாங்கப்படுவர்.

மேலும் கல்வித் துறையை மேலும் வலுப்படுத்துவதற்காக, எதிர்காலத்தில் கல்வி நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஆசிரியர் ஆலோசகர்களை படிப்படியாக நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வது மாத்திரம் கல்வித் துறை மேம்பாட்டிற்குப் போதுமானதாக அமையாது எனச் சுட்டிக்காட்டிய பிரதமர், ஆசிரியர்களின் முறையான பரவலாக்கம், கல்வி நிர்வாகம் மற்றும் தரவு முகாமைத்துவம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

கல்வித் துறையில் அரசாங்கம் பாரிய முதலீட்டை மேற்கொண்டு வருவதாகக் குறிப்பிட்ட அவர், நாட்டின் பிள்ளைகளுக்குத் தரமான கல்வியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டே அனைத்து முயற்சிகளும் திசை திருப்பப்பட வேண்டும் என அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டுள்ளார். (நி)

# இலங்கைக்கு அதிக பணம் அனுப்பும் நாடாக குவைத்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் தாய்நாட்டிற்கு அனுப்பும் பணப்பரிமாற்றங்களில் குவைத் முதலிடத்தைப் பெற்றுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கோசல விக்ரமசிங்க, ஆண்டுதோறும் சுமார் 80,000 இலங்கையர்கள் வேலைவாய்ப்புக்காக குவைத்திற்குச் செல்கின்றனர். இது, ஆண்டுதோறும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கையர்களில் சுமார் 30 சதவீதமாகும்.

2025 ஆம் ஆண்டில் குவைத்தில் பணியாற்றிய இலங்கையர்கள் 893 மில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு அனுப்பியுள்ளதாகவும், இதன் மூலம் வெளிநாட்டு பணப் பரிமாற்றங்களில் குவைத் முதலிடத்தைப் பிடித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பணப் பரிமாற்றங்களில் கட்டார் இரண்டாவது இடத்திலும், ஐக்கிய அரபு இராச்சியம் மூன்றாவது இடத்திலும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சவூதி அரேபியா மற்றும் அமெரிக்காவும் இலங்கைக்கு அதிகளவு பணம் அனுப்பும் நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் இத்தாலி, பிரித்தானியா, மாலைதீவு, அவுஸ்திரேலியா மற்றும் இஸ்ரேலில் வாழும் இலங்கையர்களும் நாட்டின் அந்நியச் செலாவணி வருவாய்க்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்களின் பணப் பரிமாற்றங்கள், இலங்கையின் முக்கிய அந்நியச் செலாவணி வருவாய் மூலங்களில் ஒன்றாக தொடர்ந்து விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (நி)


# டெங்கு மரணங்கள் 28 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் இந்த ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் பதிவாகியுள்ள டெங்கு மரணங்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்வடைந்துள்ளது.

**அத்துடன், பாதிக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை 44,480 ஆகப் பதிவாகியுள்ளது.**

இதற்கிடையில், நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தின் 5 ஆம் நாளான நேற்றும் அரச மற்றும் தனியார் அலுவலகங்களைச் சோதனையிடும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.



இவ்வருடத்தில் இது வரையில் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளின் அடிப்படையில், பாடசாலைகள் உள்ளிட்ட கல்வி நிறுவனங்களுக்கு அடுத்தபடியாக, அதிகளவிலான டெங்கு அவதானம் மிக்க பிரிவாக அரச நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பெண் வைத்தியருக்கு எதிரான அவதூறான காணொளிகளை நீக்குக

## அர்ச்சுனா எம்.பிக்கு நீதிமன்றம் உத்தரவு

பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் மற்றும் வைத்தியர் ஜெயக்குமார் உள்ளிட்டோருக்கு எதிராக தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவு பெண் வைத்தியர், 2024 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் (Online Safety Act) கீழ் தாக்கல் செய்த வழக்கில் யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றம் நேற்று (19) தீர்ப்பளித்துள்ளது.

தன்னைத் தொந்தரவு செய்யும் வகையிலும், தனக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையிலும் சமூக வலைத்தளங்கள் வாயிலாகப் போலிப் பரப்புரைகளை மேற்கொள்கின்றனர் என்று தெரிவித்து, தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவுப் பெண் வைத்தியர் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு தீர்ப்புக்காக யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நீதிவான் நஜ்மி ஹூசைன் முன்னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது முதலாவது எதிர்த்தரப்பாளியான வைத்தியர் ஜெயக்குமார் பேசிய கருத்துகள் தவறானவை அல்ல என நீதிமன்றம் கருதியதால், அவர் வழக்கிலிருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டார்.

இரண்டாவது எதிர்த்தரப்பாளியான பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதன் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி, "அவர் ஒரு பாராளுமன்ற உறுப்பினர் என்பதால் அவருக்குப் பேச்சுச் சுதந்திரம் உள்ளது" என விளக்கமளித்திருந்தார்.

எனினும், அதனை வன்மையாக நிராகரித்த நீதிவான், நாட்டின் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, சாதாரண குடிமகனாக இருந்தாலும் சரி, பேச்சுச் சுதந்திரத்திற்கு என்று ஒரு வரையறுக்கப்பட்ட எல்லை உண்டு எனச் சுட்டிக்காட்டினார்.

எந்தவித முறையான சான்றுகளும் இன்றி ஒரு வைத்திய அதிகாரியின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்தோ, அல்லது அவர் ஊழல் புரிந்தார் என்றோ அவதூறு பரப்ப யாருக்கும் உரிமை இல்லை என நீதிவான் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பெண் வைத்தியருக்கு எதிராக இனி எவ்விதமான அவதூறு மற்றும் போலிப் பரப்புரைகளையும் சமூக ஊடகங்களிலோ அல்லது வெளியிலோ முன்னெடுக்கக் கூடாது என்றும், இதுவரை வெளியிடப்பட்ட அனைத்து அவதூறான மற்றும் போலிப் பிரச்சாரக் காணொளிகளையும் உடனடியாக நீக்க வேண்டும் என்றும் நீதிவான் கட்டளையிட்டார்.

நிகழ்நிலை காப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இரண்டாவது தீர்ப்பாக இந்த வழக்கின் தீர்ப்பு கருதப்படுகிறது. (ம-7)

# வடமாகாண குத்துச்சண்டை போட்டியில் சாதனை

## பெண்கள் பிரிவில் முதலாம் இடம்பெற்ற மல்லாவி மத்திய கல்லூரி



(மல்லாவி)

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான குத்துச்சண்டைப் போட்டியில் 5 தங்கம், 3 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 12 பதக்கங்களை வென்று, பெண்கள் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்று முல்லைத்தீவு மல்லாவி மத்திய கல்லூரி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

கடந்த 13 மற்றும் 14 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் பருத்தித்துறையில் நடைபெற்ற வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான குத்துச்சண்டைப் போட்டியில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த மல்லாவி மத்திய கல்லூரியின் ஆண் மற்றும் பெண் மாணவர்கள் பங்கேற்றனர்.

இப்போட்டியில் 5 தங்கம், 3 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களை வென்றதுடன், மாகாண மட்ட பெண்கள் குத்துச் சண்டைப் போட்டியில் முதலாம் இடத்தையும் கைப்பற்றி பாடசாலைக்கும் துணுக்காய் கல்வி வலயத்திற்கும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர். (நி-299)

# கேள்வி அறிவித்தல்

## நல்லூர் பிரதேசசபை, கொக்குவில்

## சபைநிதி மூலமான அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்

01. நல்லூர் பிரதேச சபை சார்பாக பிரதேச பெறுகைக்குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக்கேள்விகளை கோருகின்றார்.
02. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கோரப்படுகின்றது.
03. விலைக்கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு வெற்றி பெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், கீழுள்ள அட்டவணையில் காட்டியபடி புனரமைப்பு வேலைகளுக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
    5 மில்லியனுக்கும் அதிகமான பணிகளுக்கான கேள்விதாரர்கள், 1987-ஆம் ஆண்டின் 03-ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின்படி, இலங்கை பொது ஒப்பந்தப் பதிவாளரிடம் தங்களைப் பதிவு செய்துகொள்ள வேண்டும். கேள்வி ஆவணத்துடன் PCA03 சான்றிதழ் இணைக்க வேண்டும்.
04. தேவையான தகைமைகள் கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிக்கப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் Bidding Data, Contract Data மற்றும் Schedule இல் கேள்வி ஆவணம் பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் 'தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேச சபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில்' எனும் முகவரியில் (தொலைபேசி இலக்கம் - 021-222-2700) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கிலமொழியிலான கேள்வி ஆவணமொன்றை தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி கொக்குவில் என்னும் முகவரியில் 2026.06.22 ஆம் திகதியிலிருந்து 2026.07.06 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 தொடக்கம் பி.ப 03.00 வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக தொடர் இலக்கம் 01,02 இற்கு ரூபா. 6,000.00 உம் தொடர் இலக்கம் 03 தொடக்கம் 12 இற்கு ரூபா. 3,000.00 (வரி நீங்கலாக) உம் பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
07. கேள்வி ஆவணத்தை இரு பிரதிகளில் (மூலம், பிரதி) பூரணப்படுத்தி தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்னும் முகவரிக்கு 2026.07.07 ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கேள்வி பிணை வைப்புத் தொகையினை தலைவர், பிரதேச பெறுகைக்குழு, நல்லூர் பிரதேசசபை என்ற பெயரில் கீழே அட்டவணையில் காட்டப்பட்டவாறு அனுமதிக்கப்பட்ட வங்கியிலோ அல்லது நல்லூர் பிரதேச சபையிலோ செலுத்தி அதன் உண்மைப் பிரதியினை விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
09. கேள்வி திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் 2026.06.30ஆம் திகதி நல்லூர் பிரதேச சபை கலாச்சார மண்டபத்தில் மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள கேள்விதாரரர்கள் அல்லது கேள்விதாரர் சார்பில் நியமிக்கப்படும் பிரதிநிதிகள் கலந்து கொள்ள முடியும்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | From 2026.06.22 - 2026.07.06 | | | |
| | | Pre – Bid Conference | | | At 10.00 A.M On 2026.06.30 | | | |
| | | Closing and Opening of Bid | | | At 10.30A.M on 2026.07.07 | | | |
| தொ.இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | அண்ணளவான மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப்பிணை: பிணை வைப்பு | வேண்டப்படும் கேள்விப்பிணை: செல்லுபடியாகும் காலம் |
| 1. | NPS/2026/CF-II/Head Office | Extension of Office Building at Nallur Pradeshiya Sabha | 13.11 | 119 Days | C7,C6 and C5 (Building) | 77 Days | 197,000.00 | 2026.10.19 |
| 2. | NPS/2026/CF-II / Con.Shoulder | Construction of Concrete Shoulder for Council Roads at Nallur Pradeshiya Sabha. | 16.66 | 91 Days | C7,C6 and C5 (Highway) | 77 Days | 250,000.00 | 2026.10.19 |
| 3. | NPS/2026/CF-II / Kok.Library | Repair Works of Kokuvil Public Library | 5.96 | 91 Days | C8,C7 and C6 (Building) | 77 Days | 90,000.00 | 2026.10.19 |
| 4. | NPS/2026/CF-II / Nal.Library | Repair Works of Nallur Public Library | 2.83 | 91 Days | C9,C8 and C7 (Building) | 49 Days | 43,000.00 | 2026.09.21 |
| 5. | NPS/2026/CF-II / Drainage | Construction of Drainage Channel in Pulavanar Veethy, Kalviyankadu. | 3.67 | 84 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 56,000.00 | 2026.09.21 |
| 6. | NPS/2026/CF-II / Pac 01 | Renovation of Roads, Package – 01 (Manchathady Road & Manchathady Road By lane) | 4.90 | 91 Days | C8,C7 and C6 (Highway) | 49 Days | 74,000.00 | 2026.09.21 |
| 7. | NPS/2026/CF-II / Pac-02 | Renovation of Roads, Package – 02 (Puvanewary Amman Road, 5th Cross Lane Paatpannai Road, Kulamkarai Road 8th Lane, Kerniyadi Veethy Ariyalai East) | 3.61 | 84 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 55,000.00 | 2026.09.21 |
| 8. | NPS/2026/CF-II / Pac - 03 | Renovation of Roads, Package – 03 (Maniyakara Road by lane, Kalasalai Road 3rd lane, Kaladdy 2nd Road By Lane) | 4.42 | 84 Days | C8,C7 and C6 (Highway) | 49 Days | 67,000.00 | 2026.09.21 |
| 9. | NPS/2026/CF-II / Pac - 04 | Renovation of Roads, Package – 04 (Veerapathirar Road 2nd Lane, Narayanan Road 2nd Lane, Valaka Veethy 6th Lane, Potpathy German Store Near Road) | 3.67 | 84 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 55,000.00 | 2026.09.21 |
| 10. | NPS/2026/CF-II / Con.Sho.Kaladdy Munthal | Construction of Concrete Shoulder at Kaladdy Munthal Road | 6.79 | 84 Days | C8,C7 and C6 (Highway) | 77 Days | 102,000.00 | 2026.10.19 |
| 11. | NPS/2026/CF-II / Poncity Road | Improvements of Poncity Roads (Balance Work) | 3.53 | 84 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 53,000.00 | 2026.09.21 |
| 12. | NPS/2026/CF-II/ Cemetery | Improvements of Cemeteries | 2.33 | 28 Days | C9,C8 and C7 (Highway) | 49 Days | 35,000.00 | 2026.09.21 |

தலைவர்,
பிரதேச பெறுகைக்குழு,
நல்லூர் பிரதேசசபை,
கொக்குவில்.

(C-5875) 20.06.2026

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவுக்கு குழாய் மூலம் குடிநீர் விநியோகம்

## விரைவில் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)

**நயினாதீவு குடிநீர் விநியோகத்தை கடலடிக் குழாய் மூலம் மேற்கொள்ளும் திட்டத்தை முன்னெடுக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று வெள்ளிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.


நயினாதீவுக்கான குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்துள்ள நிலையில் இது தொடர்பில் அதிகாரிகளைக் கேட்டறிந்த அமைச்சர் குழாய் மூலக் குடிநீர் விநியோகத்தில் முக்கியத்துவத்தை கேட்டறிந்ததுடன் அதை தீர்மானமாக நிறைவேற்றுவதாக முன்மொழிந்திருந்தார்.

இதேவேளை குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீபன் கருத்து தெரிவிக்கும் போது தீவகத்திற்கான குடிநீர் விநியோகம் பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகிறது.

தொடர்ச்சியாக குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரங்கள் பழுதடைகின்றன. எனவே அதற்கான மாற்று வழிகளைத் தேட வேண்டும். இதற்கு கடலடிக் குழாய் மூலமான குடிநீர் விநியோகமே சரியானது என அவர் மேலும் தெரிவித்தார். (நி-க)

# மக்களின் காணிகளில் விவசாயம் செய்யும் இராணுவம்

## ஏற்க முடியாது என்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி



(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் காணிகளில் படையினர் விவசாயம் செய்தல் என்பது மிகப்பெரிய அநியாயம் என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வலி. வடக்கில் பொது மக்களின் காணிகளை இராணுவத்தினர் அபகரித்து வைத்துள்ளனர் என வலிவடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சுகிர்தன் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களின் காணிகளை மக்களுக்கே வழங்க வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

மக்கள் இருக்க காணி இல்லாமல் அல்லல்பட அக்காணியில் படையினர் விவசாயம் செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அது மிகமிக அநியாயமானது.

எனவே மக்களின் காணிகளை அபகரித்து வைத்துள்ள படையினர் உடன் அவற்றை மக்களுக்கே வழங்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-க)

# சுகாதார ஊழியர்களின் நிரந்தர நியமனம்

## நேர்முகத்தேர்வின் மூலம் மேலும் பலர் உள்ளீர்க்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்காலிக சேவையிலுள்ள சுகாதார ஊழியர்களின் நிரந்தர நியமனத்தை விரைவுபடுத்துமாறு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சுகாதார ஊழியர்களின் நேர்முகத் தேர்விற்கு சுமார் 103 பேர் தகுதியாக இருந்தபோதிலும் 15 பேர் மாத்திரமே நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த விடயம் தொடர்பில் தகுதியான மிகுதி 88 பேரையும் நேர்முகத்தேர்வில் உள்வாங்குமாறு சுகாதார அமைச்சிடம் தெரிவித்தார். (நி-க)

# பிறவுண்வீதி - அன்னை சத்திர வீதியை மக்கள் பாவனைக்கு திறக்குமாறு தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிறவுண் வீதி, அன்னை சத்திர வீதியை புகையிரதத் திணைக்களத்தினர் மூடியுள்ள நிலையில் அதனை உடன் மக்கள் பாவனைக்கு திறந்து விட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அண்மையில் குறித்த வீதியை புகையிரதத் திணைக்களம் மூடி பொதுமக்கள் போக்குவரத்தை முற்றாக முடியதனால் அப்பகுதி மக்கள் தொடர்ச்சியாக போராட்டங்களை மேற்கொண்டு வரும் நிலையில் இவ்விடயம் தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பேசப்பட்டது.

350 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்தும் மிகப் பழமையான வீதியை எந்தவித பொறுப்புணர்வும் இன்றி திடீரென மூடியதன் காரணம் என்ன என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளை வினவினர் அமைச்சர் சந்திரசேகர்.

அதற்கு குறித்த அதிகாரிகளின் திருப்தியற்ற பதிலை ஆட்சேபித்த அவர் பொதுமக்கள் மற்றும் மாணவர்களை பாதிக்கும் வகையில் குறித்த வீதி புகையிரதத் திணைக்களத்தால் மூடப்பட்டுள்ளமை பொறுப்பற்ற செயல் எனத் தெரிவித்ததுடன் இவ்வீதியை பொதுமக்கள் பாவனைக்கு உடன் வழங்க வேண்டும் என தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

குறித்த தீர்மானத்தை நெடுஞ்சாலைகள் அமைச்சுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதன்போது கருத்துரைத்த யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்.மாவட்டத்தில் 19 தற்காலிக புகையிரத் கடவைகள் இருக்கின்றன. அவற்றிற்கான ஊதியத்தை புகையிரதத் திணைக்களமே வழங்கி வரும் நிலையில் அவர்கள் புகையிரதங்கள் வரும் வேளைகளில் குறித்த பணியில் இருக்கிறார்களா என்பதையும் உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொண்டார். (நி-க)

# எல்நினோவால் இலங்கைக்கு பாரிய பாதிப்பு இல்லை

## விவசாயத் திணைக்களம் நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்பார்க்கப்படும் எல் நினோ கால நிலை மாற்றங்களினால் இலங்கைக்குப் பாரியளவில் பாதிப்புகள் ஏற்பட மாட்டாது என்று விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி என். ஏ. ஆர். டி. விக்ரமரச்சி தெரிவித்துள்ளார்.

"பசுபிக் சமுத்திரம் உட்பட உலகின் பல பகுதிகளில் நிலவும் அதிக உஷ்ணம் காரணமாக கடல் நீர் வெப்பமடைவதையே "எல் நினோ" காலநிலை மாற்றம் எனக் குறிப்பிடுகின்றனர். இதனால் கடுமையான வறட்சி ஏற்பட்டு விவசாயத்துறை பாதிக்கப்படலாம் என்றும், மழைவீழ்ச்சி குறைந்து, வெப்பநிலை அதிகரிக்கும் என்றும், நெல் உள்ளிட்ட விவசாய உற்பத்திகள் வீழ்ச்சியடையும் என்றும் சில எதிர்வுகூறல்கள் முன் வைக்கப்பட்டு வருகின்றன.

இருப்பினும், இலங்கையின் புவியியல் அமைவிடம் மற்றும் எமக்குக் கிடைக்கின்ற பருவமழைப் பொழிவு ஆகியவற்றின் காரணமாக, இந்த எல் நினோ தாக்கத் தினால் நாடு கடுமையான பாதிப்புகளை எதிர்கொள்ளாது என்றே நாங்கள் கருதுகின்றோம்.

தற்போதைய நிலையை விட சற்று அதிகமான வெப்ப நிலையும், ஓரளவுக்குக் கூடுதல் மழைவீழ்ச்சியும் ஏற்படலாமே தவிர, அச்சுறுத்தலான சூழல் உருவாகாது.

இருந்த போதிலும், இதனை நாம் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாது. முன்னெச்சரிக்கை நடவடிக் கையாகப் பல விடயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக குறைந்த நீர் விநியோகத்தைக் கொண்டு, வறட்சிக்குத் தாக்குப் பிடித்து வளரக்கூடிய உணவுப் பயிர்களை நாம் அடையாளம் கண்டு பயிரிட வேண்டும்.

நாட்டில் அனர்த்தங்கள் ஏற்பட்ட காலங்களில் எல்லாம் எமது நாட்டு விவசாயிகள் முன்வந்து கைகொடுத்தமையால், எமக்கு உணவுப் பிரச்சினைகள் பாரியளவில் ஏற்படவில்லை.

இலங்கை மக்களின் பிரதான உணவாக அரிசி காணப்படுவதுடன், அதில் நாம் தற்போது தன்னிறைவு அடைந்துள்ளோம். எனவே, எமது பிரதான உணவான அரிசி உற்பத்திக்கு இக் காலநிலை மாற்றத்தால் பாதிப்புகள் ஏற்படக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)



## விற்பனை முகவரை தெரிவு செய்தல் (உள்நாட்டு, வெளிநாட்டு)

தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியில் (வரணி வடிசாலை) உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாராய வகைகள் (30%,33.5%,34% - 750ml,375ml,180ml) மற்றும் பருவகாலங்களில் போத்தலில் அடைக்கப்படும் கள் போன்றவற்றை அனுமதி பெற்ற விற்பனை நிலையங்களுக்கும், வெளிமாவட்டங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கான முகவரை தெரிவு செய்யவுள்ளோம். இத்தெரிவுகள் யாவும் நெறியாளர் குழுவில் ஆராயப்பட்டு தெரிவு செய்யப்படும் விண்ணப்பங்களை வழங்க விரும்புவோர் 02.07.2026 ஆம் திகதிக்கு முன்னதாக **"தலைவர், தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, வரணி"** என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் விண்ணப்பம் வழங்க முடியும், விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரருடன் நிபந்தனைகளை உள்ளடக்கி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு (வங்கி உத்தரவாதம் பெறப்பட்டு) செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 0212050854.

தலைவர்,
க.செல்வேஸ்வரன்.

(C-5868)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு ஆண் சிற்றூழியர்களை நியமிக்குக!

(சாவகச்சேரி)

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு ஆண் சிற்றூழியர் ஒருவர் உடனடியாக நியமிக்கப்பட வேண்டும் என மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போது வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இது தொடர்பாக மக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவிக்கையில்

கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை ஏ9 வீதியில் அமைந்து காணப்படுகிறது. கிளிநொச்சிப் பகுதியில் இருந்து யாழ் நோக்கி வரும் போது முதலாவது வைத்தியசாலையாகவும் உள்ளது.

இப்பகுதி அதிகளவு விபத்துக்கள் இடம்பெறும் பகுதியாக உள்ளது.

எனவே விபத்துக்கள் இடம்பெறும் போது உடனடியாக கொடிகாமம் பிரதேச வைத்திய சாலைக்கு விபத்துக்குள்ளானவர்களை எடுத்துச் செல்லும் போது ஆண் சிற்றூழியர்கள் இன்மையால் வைத்தியர்கள், பெண் ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

அதேநேரம் வைத்தியசாலையில் ஒரு தாதிய உத்தியோகத்தர்கள் கூட இல்லை. தினமும் பெருமளவானவர்கள் சிகிற்சை பெறும் கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு உடனடியாக ஆண் சிற்றூழியர் மற்றும் தாதிய உத்தியோகத்தர் ஆகியோர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்திருந்தனர். (30)



மாணவர்களிடையே ஜனநாயக விழுமியங்கள், தலைமைத்துவப் பண்புகள், பொறுப்புணர்வு மற்றும் நல்லாட்சிச் சிந்தனைகளை. வளர்க்கும் நோக்கில் யா/அச்சுவேலி மத்திய கல்லூரியின் மாணவர் பாராளுமன்றம் அண்மையில் கல்லூரியின் பிரதான மண்டப த்தில் சிறப்பாக நடைபெற்றது.

# டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு படகுகள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு படகுகள் மற்றும் வலைகள், காரைநகர் சீ நோர்த் படகு உற்பத்தி நிறுவனத்தில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை கடற்றொழில் அமைச்சரால் வழங்கி வைக்கப்பட்டது. அதன் போது, 32 வலை கள் மற்றும் 18 படகுகள் வழங்கப்பட்டன.

18 படகுகளில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நெடுந்தீவிற்கு 2 படகுகளும் , காரை நகருக்கு 1 படகுமாக மூன்று படகுகளும், முல்லைத்தீவு மாவட்டத்தில் கொக்குளாய் 6, நாயாறு 3, பெரிய கருப்பட்டி 1, அலம்பில் 1 , முகத்துவாரம் 1, செம்மலை 1 என 13 படகுகளும், மன்னார் மாவட்டத்திற்கு 2 படகுகளுமாக வழங்கி வைக்கப்பட்டன. (3-33)

# கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடாத்தப்படும் தமிழ் மற்றும் தமிழ் மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி கற்கைநெறிக்கான 2026/2027இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இக்கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்கு மேற்பட்டவராகவும், க.பொ.த உயர்தரத்தில் தமிழ் உள்ளடங்கலாக மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது கா.பொ.த சாதாரண தரத்தில் தமிழ் மற்றும் தமிழ் இலக்கியத்தில் குறைந்தபட்சம் 'B' தரத்துடன் க.பொ.த உயர் தரத்தில் தமிழ் மொழி மூலத்தில் பரீட்சைக்குத் தோற்றி குறைந்தபட்சம் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் அல்லது தேசிய கல்வியியல் கல்லூரியில் கற்பித்தலில் (தமிழ் மொழி) தேசிய டிப்ளோமா சான்றிதழினைப் பெற்றிருத்தல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக மூதவையினால் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஏதேனும் வேறு சமமான உயர் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

இக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்களை 15.07.2026 இற்கு முன்னதாக இணையத்தளம் (www.ou.ac.lk) ஊடாகவோ யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தின் ஊடாகவோ பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

---

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் முயற்சியாண்மை மற்றும் சிறு வணிக முகாமைத்துவ உயர்தர சான்றிதழ் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் ஏற்கனவே கோரப்பட்டுள்ள நிலையில் அதன் முடிவுத் திகதி மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16 வயதிற்கு மேற்பட்டவராக வும், கா.பொ.த சாதாரண தரத்தில் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் முதலாம் மொழி கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருத்தலோடு ஏதாவது இரு திறமை சித்திகள் (C Pass) காணப்படவேண்டும்.

விண்ணப்பப்படிவங்களை 30.06.2026 இற்கு முன்னதாக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம் பிறவுண் வீதி கொக்குவிலில் அமைந்துள்ள நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (3)

# வாராந்திர குறைகேள் சந்திப்புக்களை நடத்த புதுக்குடியிருப்பு பிரதேச சபை நடவடிக்கை

(வவுனியா)

புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்குட்பட்ட பரந்த நிலப்பரப்பில் வாழும் மக்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளை இலகுவாகக் கேட்டறிந்து தீர்வு காணும் நோக்கில், பிரதேச சபையின் உப தவிசாளர் சுந்தரம் பரந்தாமன் தலைமையில் வாராந்திர குறைகேள் சந்திப்புகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கற்சிலைமடு, பேராறு, கூழாமுறிப்பு, தண்டுவான், ஒதியமலை, ஒட்டுசுட்டான் மற்றும் முத்தையன் கட்டு பகுதிகளை சேர்ந்த பொது மக்கள், பிரதேச சபை தொடர்பான தங்களது தேவைகள் மற்றும் குறைகளை முன்வைப்பதற்காக ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஒட்டுசுட்டான் உப அலுவலகத்தில் நடைபெறும் சந்திப்பில் கலந்துகொள்ள முடியும்.

அதேவேளை ஒலுமடு, மாங்குளம் மற்றும் திருமுறிகண்டி பகுதிகளை சேர்ந்த மக்கள் ஒவ்வொரு புதன் கிழமையும் ஒலுமடு உப அலுவலகத்தில் நடைபெறும் குறைகேள் சந்திப்பில் பங்கேற்கலாம்.

மேலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் உப தவிசாளரின் சந்திப்பு நடைபெறவுள்ளது.

இந்நடைமுறையை அமுல்படுத்துவதற்கு எழுத்து மூலமாக அறிவுறுத்தியுள்ளதுடன், இனிவரும் காலங்களிலும் வழமையாக இச்சந்திப்புகள் இடம்பெறவுள்ளதாகவும் புதுக்குடியிருப்பு பிரதேசம் பரந்த நிலப்பரப்பைக் கொண்டுள்ளதால், மக்கள் தூரப் பயணங்களை மேற்கொள்ளாமல் தங்களது தேவைகளை விரைவாக முன்வைத்து தீர்வு பெற்றுக் கொள்ளும் வகையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும், மக்களுக்கான சேவைகளை மேலும் இலகுபடுத்தும் நோக்கில் இத்திட்டம் நடை முறைப்படுத்தப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தவிசாளர் வேலாயுதம் கரிகாலன் தெரிவித்துள்ளார். (3-299)

# இணுவில் கந்தசுவாமிக்கு இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க இணுவில் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் .இன்று சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

25 நாட்கள் நடைபெறவுள்ள இவ் உற்சவத்தில் எதிர்வரும் ஜுலை மாதம் 1 ஆம் திகதி மாலை 7 மணிக்கு மஞ்சத் திருவிழாவும் 13 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் 14 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளதென ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (3)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் அருள்மிகு வெள்ளெருவைப் பிள்ளையார் ஆலய மகோற்சவம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 11 நாட்கள் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

இம் மகோற்சவ தினங்களில் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறத்திருவிழாவும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதென ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (3)



புதுக்குடியிருப்பு பிரதேச செயலகமும், கரைதுறைப்பற்று பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த "கலைஞர் சங்கமம்" நிகழ்வு நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு இசானியா கலாமன்றத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மணிமகுடம் நாயகன் கேதீசண்ணன்




## உயர்திரு. அமரசிங்கம் கேதீஸ்வரன்

(இலங்கை திட்டமிடல் சேவை தரம் II )
BA(HONS), M.phil (ECN), Dip in Planning)

அறுபது வயதிலும்
அம்சமாக இருப்பவரே..
நஞ்சில்லா மனசினாலே
அன்பு நிதம் கொண்டவரே..

நெடுந்தீவு தந்து
பளையில் புகுந்த மகன்
நீண்ட ஆயுள் பெற வேண்டும்..
கிளிநொச்சி பெற்ற பேறு
பலர் சாட்சியென்று கூறு..

ஆர்ரேம் கண் பட்டிடாத
அமாவாசைச் சூரியனே..
அமர சிங்கம் பெற்றெடுத்த,
பளை செல்லையாவின் மருமகன்
அருமையான மன்னவரே..

கவியரங்கக் கவிதைகளில்
சந்தவோசை விஞ்சி நிற்கும்..
காந்தக் குரல் கரும்புக் குரல்
கம்பீரமாய்த் தெறித்து விழும்..

கூட்டுறவால் நாட்டுறவை
கூடி முயன்று பெற்ற வராம்..
பாட்டினிலும் நாட்டுப் பற்றை
பக்குவமாய் ஊட்டிய வராம்..

பொருளியலில் படித்த படி
திட்டமிடல் சட்டப்படி..
சற்றும் நிலை தளர்ந்திடாத
சுற்று நிருபம் அத்துப்படி..

அரசியலை உரசியுரசி
அறிவியலாய் பேசிடுவார்..
இவரெந்தக் கட்சியென்று
ஆராய்ந்திட முடிவதில்லை..

ஆர்ப்பரிக்கும் இடத்திற் கூட
அமைதியாக இருந்திடுவார்..
போட்டுக் குடுப்பார் கதையைக் கூட
பொறுமையாகக் கேட்டிடுவார்..

ஆர்ரேம் கதை கேட்பதில்லை
கேட்ட பக்கம் நிற்பதில்லை..
இளையவரை வளர்ப்பதிலே
என்றும் பஞ்சிப்பட்டதில்லை..

தேடி நிதம் நாடி யாரும்
ஓடியிவரிடம் போனாலும்..
வாடி வதன மிரா தென்றும்
கூடிக் கதை பேசிடுவார்..

அண்ணருடன் இருந்திடும்
நிமிடங்கள் விரயமில்லை..
அபிவிருத்தி என்றுரைக்கும்
அரவணைப்பும் குறைவதில்லை..

மனம் போல வாழ் வென்ற
மொழிதனை நேரில் கண்டோம்..
மனையாளும் பிள்ளைகளும்
மான்புடனே வாழக் கண்டோம்..

இன்னும் இன்னும் அறுபதுகள்
இங்கு நீங்கள் வாழவேண்டும்..
எங்களைப் போல் இளையவர்க்கு
எடுத்தியம்பியிருக்க வேண்டும்..



எங்களைப் போல் இளைய வர்க்கு
எடுத்தியம்பியிருக்க வேண்டும்..
இன்னும் இன்னும் அறுபதுகள்
இங்கு நீங்கள் வாழ வேண்டும்..

அன்புடன் வாழ்த்துவோர்:- மோகன்ஸ் புத்தகசாலை
MCN.Malti Mart
பளை. (C-5867)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கரியபுலம் அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவப் பெருமான் ஆலயத்தில் பராபவ வருட அலங்கார உற்சவப் பெருவிழா கடந்த 24.05.2026 ஞாயிற்றுக் கிழமை ஆரம்பமாகி 22.06.2026 திங்கட்கிழமை வரை 30 தினங்கள் இடம்பெற்று வருகின்றது.

இவ் உற்சவ காலங்களில் "தெய்வீகப் பேருரையினை செந்நாப்புலவர் மதுர கவி காரை. எம்.பி அருளானந்தன் நிகழ்த்தி வருகின்றார்.

22.06.2026 திங்கட்கிழமை 30 ஆவது உற்சவப் பெருவிழா தினத்தன்று விசேட அபிஷேக வழிபாடுகளும் சுவாமி உலாவரும் திருக்காட்சியும் இடம் பெறவுள்ளதென ஆலய தர்மகர்த்தா தெரிவித்துள்ளார். (3)

# புற் தரவைக்கு விசமிகளால் தீ வைப்பு



(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி பருத்தித்துறை மருதங்கேணி வீதியில் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்திற்கும் வலிக்கண்டிக்கும் இடைப்பட்ட பகுதியில் சற்று முன்னர் ஏற்பட்ட தீப் பரவலை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் பருத்தித்துறை பிரதேச சபையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த பகுதியில் விசமிகளால் சம்புப் புற் தரவைக்கு தீ வைக்கப்பட்ட நிலையில் அது பாரிய தீயாகப் பரவி ஏற்பட்ட புகையால் வீதியின் போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டிருந்தது.

இந்நிலையில் அதனை கட்டுப் படுததும் நடவடிக்கையில் பருத்தித் துறை பிரதேச சபை ஊழியர்கள் ஈடு பட்டு தற்போது அது கட்டுக்குள் வந்துள்ளது.

வரட்சியான காலத்தில் வடமராட்சி மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் பல இடங்களில் தீப் பரவல் ஏற்படுவது குறிப்பிடத்தக்கது. (3-60)

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

**ஆதன இலக்கம் 46, முதலியார் காட்டு 1ம் ஒழுங்கை, வட்டாரம் 01**

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 01, முதலியார் காட்டு 1 ஆம் ஒழுங்கை, ஆதன இலக்கம் 46 என்ற ஆதனத்திற்கான ஆதன வரிப்பதிவேட்டில் கங்காதரப்பிள்ளை உரிமைகோருபவர் எஸ் சுந்தரமூர்த்தி என்ற பெயர் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்திற்கு பெயர்மாற்றத்திற்காக சின்னத்துரை தனராஜ் மற்றும் பெண் மாரியம்மா என்பவர்கள் விண்ணப்பித்துள்ளார்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனமானது ஆரம்பத்தில் சின்னத்தம்பி நல்லதம்பி என்பவர் தனது தங்குதடையற்ற ஆட்சிக்குட்பட்டது என 2006ஆம் ஆண்டு மாசி மாதம் 12ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு ப.இராசகுரு முகதாவில் 5635ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் வெளிப்படுத்தியிருந்தார் பின்னர் சின்னத்தம்பி நல்லதம்பி மரணமடைய அவரது மகன் நல்லதம்பி ஜெயபாலன் தனது சகோதரி நல்லதம்பி ஜெகதா என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் 2010ஆம் ஆண்டு மார்கழி மாதம் 20ஆம் திகதியில் 2833ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் நன்கொடையாக வழங்கியுள்ளார். பின்னர் நல்லதம்பி ஜெகதா என்பவர் பிரசித்த நொத்தாரிசு இ.சபேசன் முகதாவில் 2011.04.10 திகதியில் 3074ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதியால் சின்னத்துரை தனராஜ் மற்றும் பெண் மாரியம்மாவிற்கும் அறுதியாக விற்றுள்ளனர்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:

ஆதனப்பெயர் : **செட்டிக்கிழுவாணை**

இறை: அராலி கிழக்கு

விஸ்தீரணம்: நிலப்பரப்பு 01 ½

எல்லைகள் **கிழக்கு:** மிகுதி ஆதனம், **வடக்கு:** ஒழுங்கை, **மேற்கு:** செல்லன் சுந்தரமூர்த்தியின் ஆதனம், **தெற்கு:** சிவக்கொழுந்துவிற்கும் பெண் சிவபாக்கியத்திற்கும் உரிய ஆதனம்.

இவ் ஆதனப் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை யாருக்காவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்துரை தனராஜ் மற்றும் பெண் மாரியம்மா ஆகியோருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றத்தால் வரக்கூடிய எந்த பொறுப்பிற்கும் வலிமேற்கு பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.


**தவிசாளர் /செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(7876)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# பாரதம்

## லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் 18 பேர் உயிரிழந்ததாக தகவல்



(லெபனான்)

தெற்கு லெபனான் மீது நேற்று நடத்தப்பட்ட இஸ்ரேலியத் தாக்குதல்களில் குறைந்தது 18 பேர் உயிரிழந்ததாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளையில், அண்மைய மோதல் தீவிரமடைந்ததிலிருந்து நிகழ்ந்த மிக மோசமான இந்த தாக்குதலில் நான்கு இஸ்ரேலிய வீரர்கள் கொல்லப்பட்டதாக அந்நாட்டு இராணுவம் குறிப்பிட்டுள்ளது.

நள்ளிரவு முதல் நடைபெற்ற தீவிர வான்வழித் தாக்குதல்கள் மீட்பு மற்றும் வெளியேற்றும் பணிகளுக்குத் தடையாக உள்ளதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.


மேலும், முதற்கட்டமாக 18 பேர் உயிரிழந்ததாகவும், 33 பேர் காயமடைந்ததாகவும், இந்த எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் எனவும் லெபனான் சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இந்த நடவடிக்கைகள் ஈரானுடனான அமெரிக்க-இஸ்ரேல் போரை முடிவுக்குக் கொண்டுவர நேற்று முன்தினம் புதன்கிழமை அமெரிக்காவின் மத்தியஸ்தத்தில் எட்டப்பட்ட ஒப்பந்தம் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளது.

இந்த ஒப்பந்தம், லெபனான் உட்பட அனைத்து முனைகளிலும் பகைமைகளை முடிவுக்குக் கொண்டு வரவும், லெபனானின் பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையை சம்பந்தப்பட்ட தரப்பினர் மதிக்கவும் அழைப்பு விடுக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி)

# அமெரிக்கா –

# பேச்சுவார்த்தை



(வோஷிங்டன்) ——

சுவிற்சர்லாந்தின் ப
ஸ்டாக் மலைப் பகுதி வி
வெள்ளிக்கிழமை நன
விருந்த அமெரிக்கா ப
ஈரான் இடையிலான
வார்த்தைகள் நடை செ
என்று சுவிஸ் வெளிவி
அமைச்சு தெரிவித்துள்

போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக டெஹ்ரான் மற்றும் வோஷிங்டன் இடையே எட்டப்பட்ட ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவது குறித்த பேச்சுவார்த்தைகளைத் தொடங்க, சுவிற்சர்லாந்தில் ஈரானியப் பேச்சுவார்த்தையாளர்களைச் சந்திக்கத் திட்டமிடப்பட்டிருந்த பயணத்திலிருந்து அமெரிக்கத் துணை

# அணு ஆயுதம்

## ஈரானிடம் இருக்கக் கூடாது

### ட்ரம்ப் அதிரடிப் பதிவு



(வோஷிங்டன்)

ஈரானிடம் அணு ஆயுதம் இருக்கவே கூடாது எனவும், அணு ஆயுதம் இல்லாத அந்த உலகமே பாதுகாப்பானது எனவும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தனது "ட்ரூத் சோஷியல்" சமூக வலைத்தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவில் தற்போது, எண்ணெய் விநியோகம் சீராக இருப்பதாகவும், பங்குச் சந்தைகள் பெரும் வளர்ச்சியைக் கண்டுள்ளதாகவும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், நாட்டின் வேலைவாய்ப்புகள் சாதனை அளவை எட்டியுள்ளதுடன், விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டு, அத்தியாவசியப் பொருட்களின் விலை குறைந்துள்ளதாகவும் ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்கா முன்னர் இருந்ததை விட வலுவாகவும், பாதுகாப்பாகவும், உலக அளவில் பெரும் மரியாதைக்குரிய நாடாகவும் மாறியுள்ளதாக, ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது பதிவில் சுட்டிக் காட்டியுள்ளார். (3)

# அந்தாட்டிக் தீவுக

# பறவைக் காய்

## 13, 000 இற்கும் மேற்பட்ட கடல் யானைக்

(கன்பெரா)

அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான தொலைதூர அந்தாட்டிக் தீவுகளில், கொடூரமான மாற்றுருவப் பறவைக் காய்ச்சல் நோய் பரவியதனால், உலகிலேயே மிக அரிதான 13,000 இற்கும் மேற்பட்ட தெற்கு கடல் யானைக் குட்டிகள் கொத்துக் கொத்தாக மடிந்துள்ளதாக அதிர்ச்சியூட்டும் புதிய ஆராய்ச்சி முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

அவுஸ்திரேலியாவின் தென்மேற்கே சுமார் 4,000 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள "ஹேர்ட் மற்றும் மெக்டொனால்ட் தீவுகள்", ஒரு மில்லியனுக்கும் அதிகமான கடல் பறவைகள் மற்றும் கடல் நாய் இனங்களின் இனப்பெருக்க வாழிடமாகத் திகழ்கின்றன.

அறிவியல் இதழான 'பயோ ஆர்கைவ்' இல் வெளியிடப்பட்டுள்ள இந்த புதிய ஆராய்ச்சி அறிக்கையில்,

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல், இந்தத் தீவுகளில் பரவத் தொடங்கிய H5N1 ரக பறவைக் காய்ச்சல் வைரஸினால், ஹேர்ட் தீவில் இருந்த 17,364 கடல் யானைக் குட்டிகளில் சுமார் 13,359 குட்டிகள் பரிதாபமாக உயிரிழந்துள்ளன. தீவின் ஒரு குறிப்பிட்ட பகுதியில் மட்டும் மிகக் கொடூரமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# வெளிநாடு

# – ஈரான்

# தகள் ரத்து!

பர்கென்
விடுதியில்
நடைபெற
மற்றும்
ன பேச்சு
பெறாது
ிவிவகார
ள்ளது.



ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் விலகிக் கொண் டதாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஒருவர் நேற்று முன் தினம் இரவு தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியானது. (நி)

# அமைதி ஒப்பந்தத்தை அடுத்து

## ஹார்முஸ் நீரிணை மீண்டும் திறக்கப்படும்




(இஸ்லாமாபாத்)

அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையே புதிய வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதைத் தொடர்ந்து, உலகளாவிய எரிபொருள் விநியோகத்தின் முக்கிய கடல் பாதையான 'ஹார்முஸ் நீரிணை' உடனடியாக மீண்டும் திறந்து விடப்படும் எனப் பாகிஸ் தான் அரசு அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. அமெரிக்கா மற்றும் இஸ்ரேலிய கூட்டுப் படைகள் ஈரான் மீது நடத்திய வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்து இருதரப்புக்கும் இடையே ஒரு கொடூரமான போர் வெடித்திருந்தது.

இப்போரினால் வளை குடா நாடுகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன், சர்வதேசக் கச்சா எண்ணெய் விநியோகத் தின் பிரதான பாதையான ஹார்முஸ் நீரிணையும் முற்றாக முடக்கப்பட்டிருந்தது.

உலகப் பொருளாதாரத்தை உலுக்கிய இந்த இராணுவ மோதலுக்கு முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் பிரான்ஸ் நாட்டில் அவசரமாகக் கூட்டப்பட்ட ஜி-7 மாநாட்டில் இந்த உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. ஜி-7 மாநாட் டில் பங்கேற்ற அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் ஈரான் உடனான அமைதி உடன்படிக்கையில் உத்தியோக பூர்வமாகக் கையெழுத்திட்டார்.

இதனைத் தொடர்ந்து, ஈரானிய ஜனாதிபதி மசூத் பெஷேஷ்கியனும் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க அமைதி ஒப்பந்தத்தில் கையெ முத்திட்டுள்ளதாக ஈரான் அரசுத்தரப்பு முறைப்படி அறிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரான் ஆகிய இரு வல்லரசு நாடுகளையும் பேச்சு வார்த்தை மேசைக்குக் கொண்டு வந்து, இந்த அமைதி ஒப்பந்தம் சாத்திய மாவதற்குப் பின்னணியில் பாகிஸ்தான் நாடு மிக முக்கிய மத்தியஸ்தராகச் செயற்பட்டுள்ளது.

இதனையடுத்து, இராஜ தந்திரப் பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக வழிநடத்திய பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷரீஃப், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பிற்கும் ஈரானிய தலைமை மதகுரு அய துல்லா மொஜ்தபா கமேனிக்கும் தனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துள்ளார்.

"இந்த அமைதி ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளமையானது, இருதரப்புக்கும் இடையே நிலவிய மிகக் கடுமையான மோதல்களுக்கு இராஜதந்திர ரீதியில் தீர்வு காண வேண்டும் என்பதில் உள்ள சர்வதேச உறுதிப்பாட்டை வெளிப்ப டுத்துகின்றது.

இந்த ஒப்பந்தத்தின் விதிகள் அனைத்தும் உடன டியாக நடைமுறைக்கு வருகின்றன.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக, ஈரான் தனது கட்டுப்பாட்டில் உள்ள ஹார்முஸ் நீரிணையை உடனடியாக மீண்டும் திறக்கும் அதே வேளையில், அமெரிக்கா ஈரானிய கடல் எல்லைகளில் விதித்திருந்த தனது கடற்படை முற்றுகையை உடனடியாக மீட்டுக் கொள்ளும்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.


இந்தத் திடீர் போர் நிறுத்த ஒப்பந்தம் மற்றும் சர்வதேசக் கடல் பாதை மீண்டும் திறக்கப்பட்டுள்ளமையானது, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலையை ஸ்திரப்படுத்த வழி வகுத்துள்ளதுடன், வளைகுடா பிராந்தியத்தில் நிலவி வந்த மூன்றாம் உலகப் போர் பதற்றத்தையும் முழுமையாகத் தணித்துள்ளது. (நி)

# ...ுகளில்

# ...ச்சல்

## ...க் குட்டிகள் பலி

97 சதவீத குட்டிகள் மடிந்துள்ளன. இறுதி ஆய்வுகள் நடத்தப்பட்ட போதிலும் குட்டிகள் தொடர்ந்து இறந்து கொண்டிருந்ததால், ஒட்டு மொத்த இறப்பு எண் ணிக்கை இதைவிட அதிக மாக இருக்கக்கூடும் என ஆராய்ச்சியாளர்கள் அச்சம் வெளியிட் டுள்ளனர். கடல் யானை களுக்கு அடுத்தபடியாக கிங் மற்றும் ஜென்டூ வகை பென்குயின் களும் இந்த வைரஸால் பாதிக் கப்பட்டுள்ளதுடன், பல நூறு முதிர்ந்த கிங் பென் குயின் களும் இறந்துள் ளன.



மனிதர் கள் எளிதில் சென்றடைய முடியாத இந்தத் தீவுகளில், விஞ்ஞானிகள் ட்ரோன் கணக்கெடுப்புகள் மற்றும் தரை வழிப் பயணங்கள் மூலம் ஒன்பது வகையான உயிரினங் களிடமிருந் து மாதிரிகளைச் சேகரித்து ஆய்வு செய்தனர். அவற்றில் தெற்கு கடல் யானை, கிங் பென்கு யின் ஜென்டூ பென்குயின், அந் தாட்டிக் ஃபர் கடல் நீர் நாய் மற்றும் சவுத் ஜோர் ஜியா டைவிங் பெட்ரல் பறவை ஆகிய 6 முக்கிய உயிரினங் க ளுக்கு H5 N1 வைரஸ் தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (3)

# உகாண்டவில் எபோலா பரவல்

## 200 இற்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

(ஆபிரிக்கா)

2000 ஆம் ஆண்டு நோய்ப் பரவலை விட மூன்று மடங்கு மோச மானதாகும் என்று ஆபிரிக்க நோய்க்கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

கொங்கோ மற்றும் உகாண்டாவில் எபோலா பரவல் தீவிரம டைந்துள்ளது. கடந்த மே 15 அன்று இந்நோய் பரவலை ஆப்பிரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் அதிகாரப் பூர்வமாக உறுதிப்படுத்தியது.

முதல் மாதத்திலேயே 200இற்கும் மேற்பட் டோரின் உயிரைப் பறித்துள்ளது என ஆபிரிக்காவின் நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் தெரிவித்துள்ளது. இந்நிலையில் கொங்கோவின் கிழக்கு மாகாண மான இடுரியில் 90 இற்கும் அதிகமான பாதிப்புகள் இது வரை பதிவாகி யுள்ளன. மேலும் இது உகா ண்டாவிற்கும் பரவியுள்ள நிலையில், அங்கு 19 உறு திப்படுத்தப்பட்ட பாதிப்பு களும் இரண்டு இறப்புகளும் பதிவாகியுள்ளன.

கடந்த வாரத்திலிருந்து நோய்த்தொற்று வழக்குகள் 38% அதிகரித்துள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட தடுப் பூசிகளோ சிகிச்சைகளோ இல்லாததால் இந்நோய் பரவல் அதிக அளவில் தீவிரமடைந்து வருகிறது. இதுவரை 894 பாதிப்புகள் உறுதிப்படுத்தப்பட் டுள்ளன. மேலும் இந்த நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண் ணிக்கை கிட்டத்தட்ட 35,000 வரை எட்டியுள் ளது.

இது 2000-ஆம் ஆண்டு நோய்ப்பரவலை விட மூன்று மடங்கு மோச மான தாகும் என்று ஆபிரிக்க நோய்க் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# ஆரோக்கிய உணவு: தொற்றா நோய்களுக்கான முற்றுப்புள்ளி

## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

அண்மைக் காலலங்களாக தொற்றா நோய்களினால் (Non Communi cable Disease) பாதிக்கப்பட்ட மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

உலக சுகாதார திணைக்கள 2021அறிக்கையின் படி, இலங்கையில் ஏறத்தாழ 83 சதவீதம் இறப்புகளுக்கு தொற்றா நோய்கள் (NCD) காரணமாக உள்ளன . இவற்றுள் பிரதானமாக நீரிழிவு நோய், இதயம் சம்பந்தமான நோய்கள். உயர் இரத்த அழுத்தம், புற்றுநோய், நீண்ட நாள் சிறுநீரக மற்றும் நுரையீரல் சம்பந்தமாக நோய்கள் அடங்குகின்றன.

துரித உணவுகளின் பாவனை, அதிக இனிப்புள்ள பானங்களினை விரும்பி உட்கொள்ளுதல் . உடற் பயிற்சியின்மை , மன அழுத்தம் ,மது புகையிலை பாவனை, அவசரமான வாழ்க்கை முறை , வேலைப்பளு , அதிக உடல் எடை என்பன இவ்வாறான நோய்கள் ஏற்படுவதற்கு செல்வாக்கு செலுத்திய போதிலும் முறையற்ற உணவு பழக்கம் ஒரு முக்கிய காரணமாக அமைகின்றது. சமநிலையான உணவினை உட்கொள்ளுவது ஒரு சிறந்த ஆரோக்கியமான உணவுப் பழக்கமாகும். உடலின் வளர்ச்சி, பராமரிப்பு , மற்றும் ஆரோக்கியத்திற்குத் தேவையான அனைத்து முக்கிய போசணைப் பதார்த் தங் களை (கார்போஹைட்ரேட்டுகள், புரதங்கள், கொழுப்புகள், விற்றமின்கள், கனியுப்புக்கள் மற்றும் தண்ணீர்) சரியான அளவிலும் விகிதத்திலும் கொண்டிருக்கும் உணவே சமநிலையான உணவாகும். சமநிலையான உணவினை நாம் எவ்வாறு அன்றாடம் உட்கொள்கின்றோம் என்பதை பின்வரும் இலகுவான முறைகளை பின்பற்றுவதன் மூலம் உறுதிப்படுத்தலாம்.

### ஆரோக்கியமான உணவுத் தட்டு (Heathy foodPlate)

ஆரோக்கியமான உணவுத் தட்டு (Healthy Food Plate) என்பது பொது மக்கள் சமநிலையான உணவுக் கட்டமைப்பை பின்பற்ற எளிய வழிகாட்டியாகும். இது உணவின் போசணை அளவுகளை சரியான அளவாக பேண உதவுகிறது.




**உரு 1: இலங்கை சுகாதார அமைச்சு மற்றும் ஒருங்கிணைந்த போசணை பிரிவின் வழிகாட்டுதலின் அடிப்படையில் உருவாக்கப்பட ஆரோக்கியமான உணவுத்தட்டு.**

இதற்காக உணவுப் பொருட்களை எடையிடத் தேவையில்லை. குழந்தைகளுக்கு 7 அங்குல அளவுத்தட்டும், பெரியவர்களுக்கு 9 அங்குல அளவுத்தட்டும் பயன்படுத்தப்படுகிறது.

இலங்கையின் சுகாதார மற்றும் போசணை அமைச்சின் வழிகாட்டுதலின் படியுள்ள, ஆரோக்கியமான உணவுத் தட்டு அனைத்து ஊட்டச் சத்துக்களையும் (மாப்பொருள், புரதம், விற்றமின்கள், கனியுப்புக்கள்) கொண்டுள்ளது. இந்த தட்டு இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

அரைத் தட்டு (1/2):

தட்டின் அரைப் பகுதி மாப்பொருள் அதிகம் உள்ள உணவுப் பொருட்களை கொண்டிருக்கும் . உதாரணமாக-அரிசி, அரிசி மாவில் தயாரிக்கப்படும் உணவுகள் (இடியப்பம், பிட்டு), கோதுமை மாவு உணவுகள் (ரொட்டி, பாண்), மாச்சத்து நிறைந்த காய்கறிகள் - பலா,ஈரப்பலா, உருளைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, வற்றாளைக்கிழங்கு போன்றவை.

**மூன்றில் ஒரு பகுதி (1/3):** தட்டு 1/3 பகுதி விலங்கு மற்றும் தாவர புரதங்களை கொண்டிருக்க வேண்டும். உதாரணமாக விலங்கு மற்றும் தாவரப் புரதச்சத்து உள்ள உணவுகள்- மீன், இறைச்சி, முட்டை, உலர் மீன், கடலுணவுகள், பால் மற்றும் பால் சார்ந்த உணவுகள், தாவரப் புரதங்கள்- பருப்பு வகைகள் (கொண்டல் கடலை, பச்சைப் பயறு, கௌபி , சோயா பீன், துவரம் பருப்பு, சோயா தயாரிப்புகள்).

மூன்றில் இரண்டு பகுதி (2/3):

தட்டு 2/3 பகுதி விற்றமின்கள் மற்றும் கனியுப்புக்கள் உள்ள காய்கறிகள் மற்றும் பச்சை இலைகளை கொண்டுள்ளது. விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த காய்கறிகள் மற்றும் பச்சை இலைகள் வகைகள். உதாரணமாக-காய்கறிகள்: கரட், தக்காளி, கத்திரிக்காய், பீன்ஸ், பீட்ரூட் போன்றவை, பச்சை இலைகள்: கீரை,பசளி, கங்குன் , முருங்கை, வல்லாரை, அகத்தி, பொன்னாங்காணி போன்றவை .

### உயிர் உணவுக்கிண்ணம் (Biotic bowl)

உயிர் உணவுக்கு கிண்ணம் என்பது ப்ரோபயாட்டிக்கள் (Probiotic) மற்றும் ப்ரீபயாட்டிக்கள் (Prebiotic) அடங்கியுள்ள உணவுகளைக் கொண்ட உணவுக் கிண்ணமாகும். இது குடல் நுண்ணுயிர் சமநிலையைப் பேணுவதன் மூலன் உடல் ஆரோக்கியத்துக்கு உதவுகிறது. பிரோபயோட்டிக் என்பன நாம் உணவின் மூலம் உட்கொள்ளுவதனால் · உடலுக்கு ஆரோக்கியத்தை தரும் உயிருள்ள நுண்ணங்கிகளாகும். ஏறத்தாழ 4-5 kg நிறையுள்ள நுண்ணங்கிகள், எமது குடலில் வாழ்வதாக அறியப்பட்டுள்ளது. இவற்றுள் எமக்கு நோய் ஏற்படுத்தும் நுண்ணங்கிகளும் பிரோபயோட்டிக் போன்ற நன்மை செய்யும் நுண்ணங்கிகளும் அடங்கியிருக்கின்றன . ப்ரீபாயோடிக் என்பது பிரோபயோட்டிக் நுண்ணங்கிகளின் வளர்ச்சியை அதிகரிக்கும் உணவுகள்.


அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் உள்ள மக்கள் பையோட்டிக் பௌல் போன்ற உணவுமுறையினை காலை அல்லது இடை நேர உணவாகவோ எடுத்து கொள்வார்கள். கிரேக்க நாட்டு முறைப்படி ஒரு பையோட்டிக் பௌல் பின்வருமாறு தயாரிக்கப்படு கின்றது.(https://clari ssalenherr.com/symbiotic-eating-prebiotic-probiotic-recipes/)

**தேவையான பொருட்கள்**

- கிரேக்க யோகட் /யோகட்-150 கிராம்.
- வாழைப்பழம்(அரை பழுத்த) - தோல் சற்று பச்சையாகவும் பழம் கடினமாகவும் இருக்க வேண்டும்- 1
- பேரிகள் -நீலப்பேரி, ரச்பெரி, ஸ்ட்ராபெரி - ஒரு கைப்பிடி அளவு
- ஆளி விதைகள் / லின்சீட்ஸ் -1 மேசைக்கரண்டி

ஓட்ஸ்(Oats)- 3 மேசைக்கரண்டி

- நிலக்கடலை , எள்ளு பதாம் , பூசணி வித்துக்கள்
- கறுவாப்பட்டை



உரு 2: உயிர் உணவுக்கிண்ணம்( Biotic bowl) (From: https://metab elly. com/en/guide-to-biotics-what-are-probiotics-prebiotics-synbiotics-and-postbiotics.

யோக்கட்டில், மேல் கூறிய வித்துக்கள், ஓட்ஸ் போன்றவற்றை தூவி உண்ணலாம் .எமது நாட்டில் கிடைக்ககூடிய அவல், தானியங்களையும், மாதுளை , பேரிச்சம் . உலர்ந்த திராட்சை, நெல்லி .போன்ற பழங்களை சேர்த்து பையோட்டிக் பௌல் தயாரிக்கலாம்.

பழங்கஞ்சி ஒரு உயிர் உணவுக் கிண்ணம்தயாரிப்பதற்கு பொருத்தமான உணவாகும்.ஆய்வுகளின் படி, பழைய கஞ்சி நமக்கு உடல் ஆரோக்கியம் தரும் பிரோபயோட்டிக் நுண்ணங்கிகளை கொண்டுள்ளன என்பது உறுதிப்படுத்தப் பட்டுள்ளது. சிவப்பு நாடு (குத்தரிசி), வெள்ளை நாடு , கை குத்தல் அரிசி போன்றவற்றில் சமைத்த சோற்றினை இரவில் மண்சட்டியில் சுத்தமான தண்ணீரில் ஊறவிட்டு மறுநாள் சிறிது வெங்காயம் ,பச்சை மிளகாய் என்பவற்றுடன் மிதமான உப்பினை கலந்து பழங்கஞ்சி தயாரித்தார்கள். மேலும் சுவையூட்ட தயிர்,தேங்காய்ப் பால் போன்றவற்றினை சேர்த்து உண்பார்கள். பழங்கஞ்சியுடன் வெங்காயம் சேர்த்து உண்ணும் போது ப்ரீபாயோடிக் சேர்வதனால் பையோட்டிக் பௌல் தயாரிப்பதற்கு சேர்த்துக் கொள்ளலாம் .உடல் ஆரோக்கியத்திற்கு குடல் நுண்ணங்கி சூழலை (microbiome) சிறந்த முறையில் பேணி பாதுகாப்பது அவசியமாகும். ஆரோக்கியமான வாழ்விற்கு பிரோபயோட்டிக் நுண்ணங்கிகள் ப்ரீபாயோடிக் அடங்கி உள்ள உணவுகளை உட்கொள்வதன் மூலம், குடல் சமநிலையை பேணுவதன் மூலம் உடல் சமநிலையை பேணலாம் .

### உணவுக் குறிக்கோள்கள்

ஆரோக்கியமான உணவினை உட்கொள்ள சில உணவுக் குறிக்கோள்களை பின்பற்றுதல் அவசியமாகும் .

- புரதம் ஒரு நாளின் மொத்த உணவில் 15-20% ஆக இருக்க வேண்டும்.

உணவில் உள்ள மொத்த சக்தியின் அளவில் 20-30% அளவு மட்டுமே கொழுப்பு (fat) உணவில் இருந்து பெறப்பட வேண்டும். அதில், நிரம்பிய திண்மக் கொழுப்பு (saturated fat) மூலம் பெறப்படும் சக்தியின் அளவு மொத்த சக்தியின் 10% ஐ விட அதிகமாக இருக்கக் கூடாது. மீதியுள்ள சத்தியின் ( 90%) அளவு நிரம்பா அதிண்மக் கொழுப்பு (unsaturated fats) கொண்ட உணவுகள் மூலம் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

- நிரம்பா அதிண்மக் கொழுப்பு (unsaturated fats) வித்துக்கள் (நிலக்கடலை, பாதாம் , எள்ளு , பூசணி விதை), ஆணைக்கொய்யா போன்ற பழங்களிலும், சோயா, சோளம், சூரியகாந்தி, எள்ளிலிருந்து பெறப்பட்ட எண்ணெய் வகைகளிலும் காணப்படும். மீன் ஒரு சிறந்த நிரம்பா பல் அதிண்மக் கொழுப்பு(poly unsaturated fats) கொண்ட உணவாகும்.
- நிரம்பிய திண்மக் கொழுப்பு பொதுவாக கொழுப்புச் சத்து அதிகமாக உள்ள இறைச்சித் துண்டுகள், முழுக் கொழுப்புச் சத்து கொண்ட பால்சார்ந்த உணவுப் பொருட்கள் (பன்னீர் மற்றும் வெண்ணெய் போன்றவை). மேலும் தேங்காய் எண்ணெய் மற்றும் பாம் எண்ணெய் போன்ற எண்ணெய்கள் போன்றவற்றில் அதிகளவு காணப்படும்.
- டிரான்ஸ் கொழுப்பு (trans fat) உள்ள உணவுகளை தவிர்க்க வேண்டும்.

உதாரண்மாக: பதனிடப்பட உணவுகள் (processed food), துரித உணவுகள் (fast food) .ரோல்ஸ் .பற்றிஸ் , நன்றாக பொரித்த உணவுகள், பை (pies), பேக்கரி பொருட்கள், கேக், பிஸ்கட் போன்றவை.

- மூன்று வகையான காய்கறிகளையும் இரண்டு வகையான பழங்களையும் தினமும் (மொத்தம் 400 கிராம்) உண்ண வேண்டும்.
- பால் மற்றும் பால் சார்ந்த பொருட்கள் (தயிர், பன்னீர் போன்றவை) தினமும் ஒருமுறை அல்லது இருமுறை உபயோகிக்கவும்.
- சுத்திகரிக்கப்பட்ட நார்த்தன்மை இல்லாத மாப்பொருள் உணவுகளை அதிகமாக 'உட்கொள்வதை தவிர்க்க வேண்டும் இயற்கை நார்ச்சத்து அதிகமுள்ள (குறைந்தது 20-30 கிராம்) உணவுகளை தினமும் உட்கொள்ளுதல் சிறந்தது. உப்பின் அளவு ஒரு நாளுக்கு 5 கிராமுக்கு அதிகமாக இருக்கக் கூடாது.

நேரடியாக உட்கொள்ளப்படும் சீனிசத்துக்கள் மற்றும் உணவின் மூலம் மறைமுகமாக உற்கொள்ளப்படும் சீனிசத்துக்கள் சேர்த்து-ஒரு நாளுக்கு 6 தேக்கரண்டிக்கு குறைவாக மட்டுப்படுத்த வேண்டும்.

- தேவையெனில் உணவுக்கிடையில் ஆரோக்கியமான இடைநேர சிற்றுண்டிகளை-பழங்கள், தயிர், வீட்டில் தயாரித்த தானிய அடிப்படையிலான பொருட்கள்-எடுத்துக்கொள்ளலாம்.
- அதிக அளவு செறிவு வழங்கும் கொழுப்பு மற்றும் மதுபானங்களை தவிர்க்க வேண்டும்.பழுதடைந்த உணவுகள் , அஸ்பெர் ஜில்லஸ் நஞ்சு சேர்க்கும் பங்கசு தொற்றடைந்த உணவுகள், விவசாய இரசாயனங்கள் அதிகளவு விசிறப்படும் காய்கறிகளையும் . பழங்களையும் தவிர்க்க வேண்டும் .
- சேதன விவசாயத்தின் மூலம் பெறப்படும்உணவுகளை சேர்த்துக் கொள்ளுதல் நன்மைதரும்.
- செயற்கை நிறமூட்டிகள், சுவையூட்டிகள், உணவு பாதுகாக்கும் பொருட்கள் சேர்த்த உணவுகளை தவிர்த்தல் நல்லது.

ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களை பின்பற்றுவதன் மூலம் நோயற்ற வாழ்வை வாழலாம் . நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

**கலாநிதி ஜெயகௌரி நிமலன்**
**சிரேஷ்ட விரிவுரையாளர்**
**உயிரியல் துறை**
**பிரயோக விஞ்ஞான பீடம்**
**வவுனியா பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இரணைப்பாலையில் நன்னீர் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் திறந்து வைப்பு



(முல்லைத்தீவு)

ஜப்பான் அரசின் நிதி உதவியுடன் முல்லைத்தீவு மாவட்டத்தின் இரணைப்பாலை கிராமிய கடற்றொழில் அமைப்பிற்காக நிறுவப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட நன்னீர் பனிக்கட்டி உற்பத்தி நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டு உத்தியோகபூர்வமாக மீனவர் சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமைச்சின் அதிகாரிகள், உள்ளூராட்சி பிரதிநிதிகள், கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பெருமளவிலான மீனவர்கள் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், "மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாப்பதும், அவர்களின் தொழிலை நவீனமயப்படுத்துவதும் எமது அரசாங்கத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும்.

நீண்டகாலமாக நிலவி வரும் பிரச்சினைகள் அனைத்தையும் ஒரே நாளில் தீர்க்க முடியாது. எனினும், அரசாங்கம் என்ற பொறுப்புடன் அவற்றை ஒவ்வொன்றாக அடையாளம் கண்டு கட்டம் கட்டமாக தீர்த்து வைக்க உறுதியாக செயற்பட்டு வருகின்றோம்" என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

இந்நன்னீர் பனிக்கட்டி உற்பத்தி நிலையம், இரணைப்பாலை மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் உள்ள மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளுக்கு பெரும் ஆதரவாக அமையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், கடற்றொழில் துறையின் உற்பத்தித் திறன் மற்றும் வருமான உயர்விற்கும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என தெரிவிக்கப்பட்டது. (3)

## சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 250 | 120 | 250 | 200 | 250 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 180 | -- | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 400 | 550 | 600 |
| தக்காளி | 850 | 850 | 800 | 700 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 | 150 | 200 |
| கோவா | 250 | 280 | 350 | 280 | 250 |
| கரட் | 350 | 450 | 500 | 450 | 450 |
| பூசணி | 100 | 130 | 120 | 100 | 160 |
| புடோல் | 200 | 200 | 200 | 150 | 250 |
| வாழைக்காய் | 100 | 140 | 100 | 100 | 150 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 250 | 240 | 250 | -- | 200 |
| பாகற்காய் | 800 | 220 | 2000 | 2100 | 2000 |
| வெண்டக்காய் | 200 | 200 | 300 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 350 | 200 | 400 | 400 |
| பயற்றங்காய் | 400 | 600 | 500 | 700 | 600 |
| லீக்ஸ் | 400 | 450 | 500 | 400 | 450 |
| பீற்றூட் | 350 | 400 | 500 | 450 | 600 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 400 | 600 |
| முருங்கைக்காய் | 1300 | 1400 | 1500 | 2200 | 1200 |
| போஞ்சி | 700 | 600 | 600 | 600 | 700 |
| கத்தரிதம்புள்ள | 150 | 80 | 300 | -- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 50 | 150 | 80 | 80 |
| தேசிக்காய் | 400 | 500 | 400 | 500 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 120 | 100-140 |
| இராசவள்ளி | 350 | 350 | 350 | 350 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 400 | 800 | 420 | 450 |
| முள்ளங்கி | 300 | 160 | 200 | 180 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | -- | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | -- | 120 |
| ஈரப்பலா | -- | -- | 100 | -- | -- |

# ஓடக்கரை சனசமூக நிலையத்தின் மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி

(கரணவாய்)

பருத்தித்துறை - ஓடக்கரை சன சமூக நிலையத்தின் 61 ஆவது ஆண்டு விழா மற்றும் விளையாட்டுப் போட்டி நிகழ்வுகள் இன்றைய தினம் சனிக் கிழமை கல்லூரி வீதி, ஓடக்கரையில் உள்ள சனசமூக நிலைய முன்றலில் ஆரம்பமாகவுள்ளது.

61 ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு சிறப்பு போட்டிகளாக மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப் போட்டிகள் நடத்தப்பட உள்ளன.

மாவட்ட ரீதியிலான ஆண்களுக்கான 15 கிலோமீற்றர் மரதன் ஓட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் இருந்து ஆரம்பமாகி இடம்பெற உள்ளது.

இதேபோன்று வடமாகாண ரீதியாக நடத்தப்படும் 35 கிலோமீற்றர் சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் இருந்து ஆரம்பமாகி இடம்பெற உள்ளது.

சைக்கிள் ஓட்டப்போட்டியில் பங்கேற்க உள்ள வீரர்கள் அனுமதிக்கட்டணமாக ஆயிரம் ரூபா செலுத்தி பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது. அத்துடன் 0767381623 எனும் இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (3-60)

# இராசிபலன்

20.06.2026
ஆனி 06, சனிக்கிழமை
சஷ்டி முன்னிரவு 9.50 மணிவரை

மகம் பிற்பகல் 3.27 மணிவரை
சுப நேரம் 2.54-4.24 மணிவரை
இராகுகாலம் 8.54-10.24 மணிவரை
சஷ்டி விரதம், மாணிக்கவாசகர் குருபூசை

சந்திராஷ்டமம்: உத்தராடம், திருவோணம்

வளவன்

**மேஷம்**
பிள்ளைகள் குடும்பப் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், வழிபாடு திருப்தி தரும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**கடகம்**
குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**துலாம்**
எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்**
சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், குடும்பத்தில் தேவையற்ற முரண்பாடுகளைத் தவிர்ப்பது நல்லது, பிரயாண பயமுண்டு, கௌரவக் குறைவான நாள்.

**ரிஷபம்**
உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும், காலை நேரத்திலேயே கலகலப்பான சூழ்நிலை உருவாகும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்**
நண்பர்கள் ஒளிவு மறைவின்றிப் பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், முயற்சிகள் கைகூடும்.

**கும்பம்**
மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், சுபநிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்**
இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.

**கன்னி**
அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**தனுசு**
உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும்.

**மீனம்**
உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டுவீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

கோபத்தை அன்பால் வென்றிடுக, பாசத்தை விவேகத்தால் வென்றிடுக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் பாகம் - 5

1068





"அவள் எப்போதும் வருவது போல் இப்போதும் வந்தாள் அழைத்து வந்தேன், எதற்காகக் கேட்டாய்?"

"இரண்டாவது செய்தியை இந்த இளவரசி இருக்கும் போது சொல்லத் தயக்கமாய் இருக்கிறது."

"சொல், திருமலை! இவள் எனக்கு எவ்வளவு அந்தரங்கமானவள் என்பது உனக்குத் தெரியாதா? எனக்குத் தெரியக் கூடியது எதுவும் இவளுக்கும் தெரியலாம்"

"ஆனாலும் இந்த இளவரசிக்குச் சம்மந்தப்பட்ட காரியம் அது. தென்திசைச் சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி ஒரு மாபெரும் சைன்யத்தைத் திரட்டிக் கொண்டு தஞ்சைக் கோட்டையை நெருங்கி வந்து கொண்டிருக்கிறார் என்று நேற்றிரவு முதல் மந்திரிக்குச் செய்தி வந்தது. சேனாதிபதியிடமிருந்து ஓர் ஓலையும் முதன் மந்திரிக்கு வந்தது.

சக்கரவர்த்தியைத் தஞ்சைக் கோட்டையிலும், சின்ன இளவரசரை ஏதோ ஓர் இரகசிய இடத்திலும் பழுவேட்டரையர்கள் சிறைப்படுத்தி வைத்திருப்பதாக அதில் குற்றம் சாட்டியிருந்தது. பழுவேட்டரையர்கள், தனாதிகாரி பொறுப்பையும், தஞ்சைக் காவல் பொறுப்பையும், உடனே விட்டு நீங்க வேண்டும் என்றும், இளவரசரைக் கொண்டு வந்து ஒப்புவிக்க வேண்டும் என்று எழுதியிருந்தது. இல்லாவிட்டால் இன்று மாலைக்குள் தஞ்சைக் கோட்டையைச் சுற்றி முற்றுகை ஆரம்பமாகி விடும் என்று எழுதியிருந்தது. அம்மணி! தஞ்சைக்குத் தெற்குத் திசையிலும், மேற்குத் திசையிலும் ஏற்கனவே கொடும்பாளூர் படைகள் நெருங்கி வந்து விட்டனவே? தங்களுக்குத் தெரியாதா?"

"தெரியாது, முதன் மந்திரி இதைப்பற்றி ஒரு வார்த்தையும் என்னிடம் சொல்லவில்லையே?"

"சொல்லியிருந்தால், நீங்கள் ஒருவேளை தஞ்சைக் கோட்டையை விட்டுப் புறப்பட்டிருக்க மாட்டீர்கள். முக்கியமாக, கொடும்பாளூர் இளவரசியை உடனே வெளியேற்றிவிட முதன் மந்திரி விரும்பியிருக்கலாம்" "அது ஏன்? இவள் அங்கு இருந்தால் என்ன நேர்ந்து விடும்?" "இந்த இளவரசியைச் சின்னப் பழுவேட்டரையர் ஒரு வேளை சிறைப்படுத்தினாலும் படுத்தி விடுவார்"

"அவ்வளவு துணிச்சல் அவருக்கு வந்து விடுமா? மெய்யாகவே இதை நீ சொல்லுகிறாய்?"

"ஆம், தேவி! மேலும் தென்திசைச் சேனாதிபதி சொல்லி அனுப்பிய செய்தியைக் கேட்டால், தாங்களே அறிந்து கொள்வீர்கள்"

"என்ன? மேலும் என்ன?"

"இளவரசர் அருள்மொழிவர்மருக்கும், கொடும்பாளூர் இளவரசி வானதி தேவிக்கும் உடனே திருமணம் நடத்தியாக வேண்டும். ஆதித்த கரிகாலர் தமக்கு இராஜ்யம் வேண்டாம் என்று சொல்வதால் அருள்மொழிச் சோழரையே அடுத்த பட்டத்துக்கு உரியவராக யுவராஜ பட்டாபிஷேகம் செய்ய வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார். இதற்கெல்லாம் சம்மதிக்காவிட்டால் தஞ்சைக் கோட்டையை மூன்றே நாளைக்குள் தரை மட்டமாக்கி விடுவேன் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## மேகம் கறுக்கையிலே



வைகறைப் பொழுது. பெரிய மேகம் ஒன்று தான் இருந்த நிலப்பரப்பில் மழை தர எண்ணி சற்றுக் கீழிறங்கி வந்தது. ஒரு வீட்டின் கூரை மீது நின்றிருந்த சேவல் ஒன்று மேகத்திடம் "என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டது. "மழை பெய்யப் போறேன்!" சொன்னது மேகம். "ஒவ்வொரு நாள் காலையிலும் கூவி சூரியனை எழுப்புவதே நான் தான்! நீ இப்ப வந்து வானத்தை மறைத்துக் கொண்டால் எல்லோரும் இன்னும் பொழுது விடிய வில்லை என்று நினைத்துக் கொள்வார்கள். அப்புறம் நான் எப்படி என் கடமையைச் செய்கிறதாம்? நீ வேறொரு சந்தர்ப்பத்திலே வந்து பெய்!" என்றது சேவல்.

மேகம் யோசித்தது. தினமும் காலையில் சூரியனை எழுப்புவது தான் சேவலின் வேலை. அந்த சமயத்தில் நான் வந்து குறுக்கிட்டால் அது என்ன செய்யும் பாவம்? மேகத்திற்கு சேவலின் மீது பரிதாபம் வந்தது.

"சரி, நான் இன்னொரு சந்தர்ப்பத்திலே வந்து மழை தருகிறேன்!" என்றபடி அங்கிருந்து நகர்ந்து போனது. இரவுப்பொழுது அந்த மேகம் மீண்டும் அந்த இடத் திற்கு வந்தது. மழை தர இது உகந்த நேரம் என அது எண்ணியது. அப்போது ஒரு சிறு குட்டையில் தலையை மட்டும் வெளியே நீட்டி 'கொர் கொர்' என சத்தம் இட்டுக் கொண்டிருந்த தவளைக் கூட்டம் மேகத்திடம் "என்ன செய்யப் போகிறாய்?" என்று கேட்டது.

"இப்பத்தான் நாங்க எல்லாம் ஒண்ணாக்கூடி இரவுப் பாட்டுப் பாடிக் கொண்டிருக் கோம்!. பூச்சிகளும் வண்டுகளும் எங்கள் பாட்டுக்கு எதிர் பாட்டு பாடுகிறார்கள்! இந்த நேரத்திலே நீ மழை பெய்தால் அந்த இரைச்சல் சத்தத்துல எங்க எசப்பாட்டு காணாமப் போயிரும்!" என்றன தவளைகள்! மேகம் யோசித்தது. 'பகல் நேரம் முழுவதும் வெயிலுக்குப் பயந்து மண்ணுக்குள்ள புதைஞ்சு கிடந்துட்டு இப்பதான் வெளியிலே தலைகாட்டுது இந்தத் தவளைகள். இவை ஒண்ணாக் கூடிப் பாடிக் கொண்டுருக்கும் போது இதுகளோட சந்தோஷத்தைக் கெடுக்கிறதா? வேண்டாம்!' என முடிவு செய்து கலைந்து சென்றது மேகம்.

மறுநாள் பகற்பொழுது. சூரியன் 'சுள்' எனச் சுட்டுக் கொண்டிருந்தது. இதுதான் மழை பெய்ய சரியான சமயம் என்றெண்ணிய மேகம் அந்தப் பகுதியில் மீண்டும் திரண்டது! அப்போது எங்கிருந்தோ மயில் ஒன்று மேகத்திடம் ஓடிவந்தது.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற. - திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தீதும் நன்றும் பிறர் தர வாரா

தேவையில்லாத வேலையை ஒருவர் செய்வாராயின் தேவையுள்ள வேலையை செய்ய முடியாமல் போகும்.

ஆம், நம் தமிழ் அரசியலில் நடந்த பல விடயங்கள் தேவையில்லாதவை. அதன் காரணமாக இன்று நம் தமிழர் அரசியல் பலயீனப்பட்டு, சுயமரியாதையை இழந்து நிற்கிறது.

என்னதான் அரசியலாக இருந்தாலும் பழிச்சொற்களும் கடும் வார்த்தைகளும் எவரையும் சுடும். அவரவர் மனதை வேதனைப்படுத்தும். சபையில் அவகௌரவத்திற்கு ஆளாக வேண்டியதாயிற்றே என்ற துன்பம் சாதாரணமானதன்று.

எனினும் இன்றைய நம் அரசியல் இத்தகைய அனுபவிப்புகளுக்குள் வீழ்ந்து கிடந்து எழ முடியாமல் தத்தளிக்கிறது.

இங்குதான் தீதும் நன்றும் பிறர் தர வாரா என புறநானூறு கூறுகின்ற மெய்ப்பொருளை நாம் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்.

உண்மை. தீதும் நன்றும் பிறர்தர வாரா என்ற புறநானூற்று அடிகளின் உள்ளார்ந்தத்தை நாம் ஆத்மார்த்தமாக உணர்ந்து கொள்வோமாக இருந்தால், எமக்காகின்ற தீதுக்கும் நன்றுக்கும் நாமே காரணம்.

ஆம், இன்றைய தமிழ் அரசியல் இத்துணை தூரம் அவலப்படுவதற்கும் அசிங்கப்படுவதற்கும் வேறு யாரும் காரணமல்ல. அனைத்தும் நாம் செய்தவற்றின் பலாபலனேயாம்.

உண்மை. எதற்கெடுத்தாலும் மற்றவர்கள் மீது நாம் பழி சுமத்தினோம் - மற்றவர்களை இழிவுபடுத்தினோம் - துரோகிகள் என்று நாக்கூசாமல் கூறினோம்.

தமிழினம் - தமிழர்களின் உரிமை என்றால், அது பற்றி பேசுவதற்கு நாங்களே தத்துவகாரர் என்று நினைத்தோம். யதார்த்தவாதிகளை கடுமையாக விமர்சித்தோம்.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் எத்துணை தூரம் மனம் நொந்திருப்பார்கள் - அவர்களின் உறவுகள் எந்தளவு தூரம் வேதனைப்பட்டிருப்பார்கள் என்று நாம் மனிதப் பண்போடு ஒரு போதும் சிந்திக்கவோ - அதுபற்றி நினைத்துப் பார்க்கவோ இல்லை. அதன் காரணமாக உண்மையான தமிழ் இனப்பற்றாளர்கள் ஒதுங்கிக் கொண்டார்கள்.

அவர்கள் ஒதுங்கியதை - அவர்களின் மௌனத்தை எங்களின் சுய அரசியல் வெற்றியாக நாம் நினைத்தோம். மகிழ்ந்தோம்.

ஆனால் நல்லவர்கள் வெளியேறினால் - நல்லவர்களை வெளியேற்றினால், நமக்குக் கிடைப்பவர்கள் எப்படியாக இருப்பார்கள் என்று நாம் ஒருபோதும் நினைத்ததில்லை. ஆனால் இன்று அதன் உண்மைத் தன்மை வெளிப்பட்டு நிற்கிறது.

என்ன செய்ய முடியும் நாமே நமக்குப் பகையானோம். நாமே நமக்குத் தீவினையைத் தேடிக் கொண்டோம்.

இனி அதை அனுபவித்துத் தான் தீர்க்க வேண்டும். அந்த அனுபவிப்புக்கான காலம் இப்போது நடந்து கொண்டிருக்கிறது என்பது தான் நிதர்சனமான உண்மை.

# இனவாதம், மதவாதத்தால் நஞ்சூட்டப்பட்டுள்ள இந்நிலத்தை மீட்டெடுப்பதே எம் இலக்கு

## அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார திடசங்கற்பம்

(கிளிநொச்சி)

இனவாதம், மதவாதம், மதவெறி ஆகிய வற்றால் நஞ்சூட்டப்பட்டுள்ள இந்நிலத்தை மீட்டெடுப்பது எளிதான காரியமல்ல. அதற்காக அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது என்று நீதி அமைச்சர், சட்டத்தரணி ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை (19) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்துரைக்கையில்

எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்து தற்போது ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. நான் ஒரு வருடத்திற்கு முன்பு இந்த இடத்திற்கு வந்த போதும் காணாமல் போனோர் தொடர்பாகவே பேச வேண்டியிருந்தது. அப்போது காணாமல் போனோர் குறித்த விசாரணைகளை மேற்கொள்ளும் கட்டமைப்பு வீழ்ச்சியடைந்திருந்தது.

ஒரு வருட காலத்திற்குள் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்திற்குத் தேவையான நியமனங்களை வழங்கி, அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்தோம். காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் மற்றும் கடந்த கால அரசாங்கங்கள் தொடர்பில் உங்களுக்குப் பலத்த வேதனைகள் இருந்தன.

அக்காலப்பகுதியில் நிலவிய அரசியல் சூழல், அந்த நிறுவனங்களை இயக்கிய விதம் ஆகியவையே இதற்குக் காரணமாக அமைந்தன.

கடந்த அரசாங்கங்களுக்கு அரசியல் ரீதியான தேவை இருந்திருந்தால் இவற்றைச் செய்திருக்க முடியும்.

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு வந்தது. ஆனால், காணாமல் போனோர் தொடர்பான பிரச்சினைகள் இன்னும் நீடிக்கின்றன என்றால், கடந்த அரசாங்கங்களுக்கு இந்த விசாரணைகளை முடிவுக்குக் கொண்டு வரும் தேவை இருந்திருக்கவில்லை.

முப்பது வருட யுத்தத்தினால் வடக்கும் தெற்கும் தாராளமாக இரத்தமும் கண்ணீரும் சிந்தியுள்ளன. மீண்டும் அப்படியானதொரு நிலைமை ஏற்படக்கூடாது.

மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படக் கூடாது என்றால் நல்லிணக்கமும் நட்புறவும் கட்டியெழுப்பப்பட வேண்டும். காணாமல் போனவர்களுக்கு நீதி வழங்கப்பட வேண்டும் என்பதுடன், இந்த விசாரணைகள் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்.

அது தொடர்பில் தற்போதைய அரசாங்கத்திற்குப் பலத்த தேவைப்பாடு உள்ளது.

தற்போது வடக்கில் காணி விடுவிப்பு நடவடிக்கைகள் முறையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. வீதிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இனிமேலும் தமிழ் மக்கள் தங்களை இரண்டாம் தரப் பிரஜைகளாக நினைப்பதற்கு இடமளிக்க முடியாது. வடபகுதி மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டும். அதற்காக நாங்கள் அர்ப்பணிப்புடன் இருக்கிறோம் என்றார். (ம-7)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு இரண்டு மாதங்களில் புதிய சட்டமூலம்

## கிளிநொச்சியில் நீதி அமைச்சர் உறுதி

(கிளிநொச்சி)

எதிர்காலத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட்டு, மக்கள் நலன்சார்ந்த புதிய சட்ட மூலம் ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர், ஹர்ஷன நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நேற்று (19) நடைபெற்ற சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

குறித்த புதிய சட்ட மூலத்தை இன்னும் இரண்டு மாதங்களுக்குள் சமர்ப்பிக்க எதிர்பார்க்கிறோம்.

இது பயங்கரவாதத்தை ஒடுக்குவதற்குக் கொண்டு வரப்படுகிறதே தவிர, தனிநபர்களையோ அல்லது வேறு தரப்பினரையோ ஒடுக்குவதற்காக அல்ல என்றார். (ம-7)

# காரைநகர் கிழவன்காட்டில் மாணிக்கவாசகர் குருபூசை

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற அறநெறிப்பாடசாலை (காரைநகர் - யாழ்கிளை) நடாத்தும் மாணிக்கவாசகர் குருபூசை நிகழ்வானது இன்று சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகள் மண்டபத்திற்கு எழுந்தருளலுடன் ஆரம்பமாகும் இந் நிகழ்வில் "கைதான் நெகிழ விடேன்" எனும் தலைப்பில் சைவப்புலவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கமலநாதன் அவர்களின் சிறப்பு சொற்பொழிவு, கலைவாணர் வில்லிசைக் குழு சின்னமணியின் சிஷ்யன் மதியழகன் குழுவினர் வழங்கும் "அருணகிரிநாதர்" வில்லிசை.

குகேந்திரன் அனுசன் குழுவினரின் இசைக் கச்சேரி கலாமன்ற அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பேச்சு, குழு இசை, வீணையில் திருவாசகத் தேனிசை, நாட்டியார்ப்பணம் உள்ளிட்ட கலை நிகழ்வுகள் எனப் பல கலை கலாசார நிகழ்வுகள் அரங்கேறவுள்ளன.

இந்நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ் கிளையிலிருந்து (இல. 432,வண்ணை சிவன் கோவில் அருகாமை கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்) பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7)

# முன்னாள் அமைச்சராக இருந்தாலும் வெளிநாடுகளில் பதுங்கி இருந்தாலும்

## சட்டத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாது

நீதிமன்றத்தால் பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நிலையில், வெளிநாடுகளில் இருப்பதாக நம்பப்படும் முன்னாள் அமைச்சர்களையும் பாதாள உலகக் குழுத் தலைவர்களையும் திரும்ப அழைத்து வருவதற்காக, எதிர்காலத்தில் நீல அறிவிப்புகள் அல்லது சிவப்பு அறிவிப்புகள் வெளியிடப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர்களுக்கு எதிராக இருந்தாலும் சரி அல்லது பாதாள உலகக் குழுக்களுக்கு எதிராக இருந்தாலும் சரி, நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் ஒவ்வொரு பிடியாணைகள் தொடர்பில் பொலிஸ் திணைக்களம் நடவடிக்கை எடுக்கும்.

நீதிமன்ற உத்தரவுகளை சட்டத்திற்கு இணங்க பொலிஸ் திணைக்களம் செயற்படுத்தி வருகிறது.

சந்தேக நபர்களை நாட்டுக்கு திரும்ப அழைப்பதை உறுதி செய்ய தேவைப்படும் இடங்களில் சர்வதேச ஒத்துழைப்பை அரசாங்கம் நாடும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## யாழ்ப்பாணம் மாநகர சபை

**பண்ணை கடற்கரைப்பூங்கா மற்றும் ஆரியகுளம் பொழுதுபோக்கு மையம் என்பவற்றிற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான கோரிக்கை - பொழுதுபோக்கு மற்றும் உணவக சேவை - 2026**

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா 1,180.00 (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 22.06.2026 - 06.07.2026 (மு.ப 9.00 - பி.ப. 2.30 மணி வரை)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 07.07.2026 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 07.07.2026 .மு.ப 10.05 மணிக்கு

**தகுதிகள்**
1. பொழுதுபோக்கு சேவை மற்றும்உணவக சேவை அனுபவம் கொண்டவர்கள்
2. பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்லது தனிநபர்
3. சுகாதார விதிமுறைகளை முழுமையாக பின்பற்றுதல்

**நிபந்தனைகள்**
1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது மாநகர முதல்வர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்று முகவரியிட்டு 07.07.2026 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கலாம்.
3. கேள்வி சமர்ப்பிப்பவர்கள் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக, நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதி அற்றவர் ஆவார். அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடச் சான்றிதழ் என்பன சமர்ப்பிக்க வேண்டும்.
6. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் அலுவலக விளம்பரப்பலகையில் பார்வையிடலாம்.

| இல | விபரம் | குத்தகைக் காலம் | பிணை வைப்பு | ஆரம்ப கேள்வித்தொகை (வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|
| 1 | பண்ணைக் கடற்கரைப் பூங்கா | 01.08.2026 - 31.12.2028 | **100,000.00** | **5,595,791.66** |
| 2 | ஆரியகுளம் பொழுதுபோக்கு மையம் | 01.08.2026 - 31.12.2028 | **10,000.00** | **584,833.33** |

மேலதிக தகவல்களை மாநகரசபையின் நானாவித இறைவரிப்பகுதியுடன் (தொலைபேசி இலக்கம் 0212215978) தொடர்பு கொண்டு அல்லது அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் - பி.ப 4.15 மணி வரை நேரடியாகச் சமுகமளித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-5873) **20.06.2026**

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

**பளை நகர பேருந்து தரிப்பிட மேல்மாடிக்கடை இல BUS - 05 நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான ஏலக்கேள்வி அறிவித்தல் - 2026**

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 22.06.2026 தொடக்கம் 05.07.2026 வரை (அலுவலக நேரம்)
கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 06.07.2026 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 06.07.2026 பிற்பகல் 2 மணி
கேள்வி திறக்கப்படும் இடம் :- பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**பேருந்து தரிப்பிட மேல்மாடிக் கடைக்கான கேள்வி அட்டவணை**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | BUS - 05 | 1,032,000.00 | 15,500.00 | 2,000.00 |

**நிபந்தனைகள்:-**
01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் எல்லைக்குள் வசிப்பவராக இருத்தல் வேண்டும். (வதிவிடச்சான்றிதழ் இணைக்கப்படுதல் வேண்டும்)
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூகமளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 06.07.2026 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரசஉத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06. நீண்டகால கடைகளுக்கு மாதாந்த கடை வாடகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தவேண்டும். குறித்த மாத வாடகைப்பணத்தினை அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். டிசம்பர் மாதத்திற்குரிய வாடகை பணத்தினை டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தவேண்டும்.
07. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித் தொகையினை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொண்டு பிரதேச சபையுடன் ஒப்பந்தத்தினை செய்துகொள்ளவேண்டும்.
08. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்துகொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
09. சித்திகர குத்தகைதாரர் பாதுகாப்பு வைப்புபணமாக 03 மாத கால வாடகை தொகையினை முற்பணமாக செலுத்தவேண்டும்.
10. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
11. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
12. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.சுப்பிரமணியம் சுரேன்,**
**தவிசாளர்,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை,**
**பளை.**

(C-5875) **20.06.2026**

## தமது காணிகளை...

வலி. வடக்கில் 249, 256, 248, 251 மற்றும் 255 ஆகிய கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாத காலப் பகுதியில் அவர்களது சொந்த இடங்களில் இருந்து வெளியேற்றப்பட்ட பின்னர், அப்பகுதி உயர் பாதுகாப்பு வலயமாகக் காணப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்து 17 வருடங்கள் கடந்த நிலையிலும் அப்பகுதிகளில் இருந்து பாதுகாப்புத் தரப்பினர் வெளியேறாத நிலையில், அவை உயர்பாதுகாப்பு வலயமாகவே காணப்படுகிறது.

இந்நிலையில் தமது 651 ஏக்கர் வரையிலான காணிகளை விடுவிக்குமாறு பல வருடங்களாக காணி உரிமையாளர்கள் போராடி வரும் நிலையில் காணிகள் விடுவிக்கப்படாத நிலையில் காணிகளை விடுவிக்குமாறு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டங்களை முன்னெடுப்பதாக காணி உரிமையாளர்கள் முடிவெடுத்திருந்த நிலையில் நேற்றைய தினமும் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

குறித்த போராட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் பங்கேற்றிருந்தார்.(ம-7,33)

## ஏ-9 வீதியை மறித்து...

செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வாய்வுப் பணிகளை நேற்றைய தினம் வெள்ளிக்கிழமை நீதி அமைச்சர் தலைமையிலான விசேட குழுவினர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் அலுவலகத்தின் ஆணையாளர்கள் பார்வையிட நீதிமன்று அனுமதித்திருந்தது.

இந்நிலையில் புதைகுழியைப் பார்வையிட வரும் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் முகமாக காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் அப்பகுதியில் கவனயீர்ப்புப் போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

அதன்போது காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச நீதி வேண்டும், புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும், காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் வேண்டாம் போன்ற பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டம் புதைகுழி அமைந்துள்ள பகுதியை அண்மித்த பகுதியில் முன்னெடுக்கப்பட்டு, போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோஷங்களை எழுப்பியவாறு காணப்பட்ட போதிலும், அவர்களைப் புறக்கணித்து அமைச்சர் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் ஆணையாளர் உள்ளிட்ட பிரதிநிதிகள் சென்றிருந்தனர்.

தம்மைப் புறக்கணித்து, தமதுக் கோரிக்கைகளை நின்று கேட்க முடியாதவர்களாக தமக்கான நீதியினைப் பெற்றுத் தருவார்கள் என நம்ப வேண்டுமா எனப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் கேள்வி எழுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## யாழ்.மாநகர சபை - பகிரங்க ஏலம் கோரல்

**காக்கைதீவு மீள்சுழற்சி மையத்திலுள்ள பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன**

காலம் : 2026 ம் ஆண்டு யூலை மாதத்தில் இருந்து ஒவ்வொருமாதமும் மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது சனிக்கிழமைகளில் காலை மு.ப 9.30 தொடக்கம் மு.ப 11.30 மணிவரை.

இடம் : காக்கை தீவு மீள்சுழற்சி மையம், காரைநகர் வீதி காக்கைதீவு.

**பொருட்கள்:**
1.பொலித்தீன் 2. வர்ணப்பொலித்தீன்
3.வெற்றுப்போத்தல் 4. துணிகள்
5.கட்டுக்களாக கட்டப்பட்டதுணி 6. ரயர்
7.காலணிகள் 8.துருப்பிடிக்காத இரும்பு
9.தகரம் 10.கண்ணாடி

**மாநகர முதல்வர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-5872)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தவறிழைத்தவர்கள்...

பிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக இந்த அலுவலகம் தீவிர மாகச் செயற்பட்டு வருகிறது. சர்வதேச விதிகளுக்கு அமைவாக செயற்படும் காணாமல் போனோர் பற்றிய அலுவலகமானது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சட்டம், சர்வதேச மனிதாபிமானச் சட்டம் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) ஆகியவற்றின் வழிகாட்டல்களுக்கு அமையவே முற்றிலும் சட்டபூர்வமாக இயங்கி வருகிறது.

அரசாங்கத்தின் நிதியைப் பயன்படுத்தினாலும் இது எந்தவொரு இராணுவப் பிரிவிற்கோ, பொலிஸாருக்கோ அல்லது அரசியல் தரப்பிற்கோ சாதகமாகச் செயற்படாத ஒரு சுயாதீனமான ஆணைக்குழு ஆகும்.

பாதிக்கப்பட்டவர்களின் உண்மை நிலையைக் கண்டறிந்து, தவறிழைத்தவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும்.

தற்பொழுது மக்கள் மத்தியில் ஓ.எம்.பியின் செயற்பாடுகள் குறித்து நேர்மறையான எண்ணம் உருவாகியுள்ளதால், மாவட்ட ரீதியாக நடத்தப்படும் அமர்வுகளுக்கு மக்கள் அதிகளவில் வருகை தந்து வருகின்றனர்.

தினசரி 100 பேருக்கு அழைப்பு விடுக்கப்படும் நிலையில், 85க்கும் அதிகமான குடும்பங்கள் நேரில் வந்து சாட்சியங்களையும் தகவல்களையும் வழங்கி வருகின்றன.

மக்களிடையே நிலவும் தவறான புரிதல்களை நீக்கி, உண்மையைச் சமூகத்திற்குக் கொண்டு சேர்க்கும் முக்கிய பங்கு ஊடகவியலாளர்களுக்கு உண்டு என மேலும் தெரிவித்தார். (ம-7)

## செம்மணியில்...

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து நேற்று 03 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ள நிலையில் புதிதாக 07 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளது.

செம்மணிப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணியின் 29ஆம் நாள் அகழ்வுப் பணிகள் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

அதனடிப்படையில் இதுவரையிலான அகழ்வுப் பணிகளின் போது 394 என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில், அவற்றில் 370 என்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. (ம-7,33)

## செம்மணிப் புதை...

புதைகுழிப் பகுதியை நேற்று வெள்ளிக்கிழமை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

செம்மணிப் புதைகுழி தொடர்பில் நீதி நிலை நாட்டப்படும். அதற்கு உரிய சகல நடவடிக்கைகளையும் நீதி அமைச்சு செய்யும்.

கடந்தகால அரசாங்கம் தமிழ் மக்களை ஏமாற்றியது போன்று, எங்களுடைய அரசாங்கமும் தமிழ் மக்களை ஏமாற்றமாட்டாது. எங்கள் அரசாங்கத்தை தமிழ் மக்கள் முழுமையாக நம்பலாம்.

வடக்கு தெற்கு என்ற பாகுபாடு இன்றி, குற்றம் செய்த அனைவருக்கும் தண்டனை வழங்கப்படும். அதற்காக விசாரணைகள் இன்றி எவரையும் கைது செய்து சிறையில் அடைக்க முடியாது.

இராணுவத்தினர் படுகொலைகளில் ஈடுபட்டு இருந்தால் அதற்கான ஆதாரங்களை முன் வைத்தால் நிச்சயமாக நாம் இராணுவத்தினருக்கு எதிராகவும் நடவடிக்கைகளை எடுப்போம் என தெரிவித்தார். (ம-7,33)

## நெடுந்தீவு...

ருந்த மீனவர் ஒருவரது சடலம் நாகப்பட்டினத்தில் நேற்று கரையொதுங்கியுள்ளது.

குறித்த சடலம் நேற்று நாகப்பட்டினம் கடற்கரையோரத்தில் கரையொதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றதுடன் அவர் அணிந்திருந்த ஆடைகளை வைத்து அடையாளம் காணப்பட்டுள்ளது.

நெடுந்தீவு திருலிங்கபுரத்தை நிரந்தர முகவ[illegible] தாளைத் து[illegible] வசிப்பிடமாகவும் கொண்ட ஜேசுதாசன் ஆரோக்கிய அன்ரனீஸ்(சுதீஸ்- வயது 41) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே கடந்த 11.06 இல் நெடுந்தீவு பகுதியில் இருந்து கடற்றொழிலுக்காகச் சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் நேற்று அவரது சடலம் தமிழகத்தின் நாகப்பட்டினம் கடற்கரையில் கரையொதுங்கியது. உரிய விசாரணைகளின் பின்னர் அவரது சடலத்தை இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-7)

## படையினருக்கு...

நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் நெடுந்தீவுப் பகுதியில் ஒரு ஏக்கர் காணி பாதுகாப்புப் படையினருக்கு ஒதுக்கப்பட்டதான முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்ட போதே அவர் இவ்வாறு கூறினார்.

பொதுமக்களிடம் அபகரிக்கப்பட்ட காணிகளை விடுவிக்கின்றோம் என்று கூறிக் கொண்டு இந்த அரசாங்கம் இவ்வாறு பொதுமக்களின் காணிகளை அபகரிப்பது எந்த வகையில் நியாயமாகும். இதை நாம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டங்களுக்கு மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்காமல் இரகசியமாக நடத்தப்படுவது, இவ்வாறு பொதுமக்கள் காணிகளை அபகரிக்கும் நோக்கிலா என அவர் கேள்வியெழுப்பியதுடன், இனிவரும் காலங்களில் காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டங்களுக்கு எமக்கு முறையான அறிவித்தல் விடுக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்தார். (ம-க)

## பண்...

உயிரிழந்தவராவார்.

சாரதி அனுமதிப் பத்திரம் எடுப்பதற்கான பயிற்சிக்காக சென்றிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபர் சாரதி பயிற்சி நிறைவு பெற்றவுடன் வாகனத்தில் இறங்கி எதி[illegible] டிருந்த பொழுது எதிரே வந்த வாகனம் குறித்த நபர் மீது மோதியுள்ளது.

இளைஞன் சம்பவ இடத்தில் உயிர் இழந்துள்ளதுடன் வாகனத்தின் சாரதி யாழ்ப்பாண பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (ம-7)

## க.பொ.த...

17ஆம் திகதி முதல் 26ஆம் திகதி வரை நடைபெற்றது.

இதில் மொத்தம் 451,463 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இந்தநிலையில், குறித்த பரீட்சையின் பெறுபேறுகள் நேற்று வெளியாகியுள்ள நிலையில் குறித்த பெறுபேறுகளை www.doenets.lk என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127



மஹஜன சம்பத
திகதி 2026.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 6223
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
N 4 8 0 5 0 7
அத சம்பத
N 0 5 0 7
சீட்டிழுப்பு இலக்கம் 0798

சுப தவசக்
திகதி 2026.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 0339
விருச்சிகம் 01 16 21
2005

தன நிதானய
திகதி - 2026.06.19
சீட்டிழுப்பு இலக்கம் - 2253
U 24 33 56 73 U

மெகா பவர்
திகதி 19/06/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2571
P 15 32 52 65 73

ஜய
திகதி 2026.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 0491
Z 5 1 3 3

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4465
சீட்டிழுப்பு திகதி 19.06.2026
B 09 16 27 57
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.06.19
சீட்டிழுப்பு இலக்கம் 1532
சிம்மம் 33 40 41 50 சிம்மம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
19.06.2026 வெற்றி வாரம் 0931
H 0 3 7 9 3 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,872,018.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3197
25000 பணப் பரிசு 76379
சீட்டிழுப்பு திகதி 2026.06.19
தினம் வெள்ளிக்கிழமை
06 07 39 48 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 136,198,984.80

சனிதா
திகதி 19.06.2026 வெற்றி வாரம் 5358
32 48 53 76 U
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 56,019,859.60
48417

சசிரி
வெற்றி வாரம் 1027
சீட்டிழுப்பு திகதி 19.06.2026
வெள்ளிக்கிழமை
22 28 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,921,600.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4909
சீட்டிழுப்பு திகதி 19.06.2026
தினம் வெள்ளிக்கிழமை
கும்பம்
07 30 47 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,708,741.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 29 55 56 68 74
2373
19.06.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.297,353,889.20

ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் 3023
சீட்டிழுப்பு திகதி 2026.06.19
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,083,652.80
10 41 72 73 R


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத சட்டம் முழுமையாக நீக்கப்படும்

## பிரதமர் ஹரிணி அமரசூரிய

பயங்கரவாத தடைச்சட்டம் இந்த ஆண்டுக்குள் முழுமையாக இரத்துச் செய்யப்படும். புதிய அரசியலமைப்பு மக்களின் அங்கீகாரத்துடன் எமது ஆட்சிக்குள் உருவாக்கப்படும். தற்போதைய நிலையில் பொருளாதார அபிவிருத்தி மற்றும் ஏழ்மை ஒழிப்புக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் நேற்று தனியார் தொலைக்காட்சியில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, நடைமுறையில் உள்ள அரசியலமைப்புபல திருத்தங்களை உள்ளடக்கி முரண்பாடுகளை கொண்டதாகவே காணப்படுகிறது. புதிய அரசியலமைப்பு ஒன்றை உருவாக்குவதாக தேர்தல் கொள்கை பிரகடனத்தில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்தோம் என்பதை நாங்கள் மறக்கவில்லை.

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் என்பது பாரியதொரு பொறுப்பாகும். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் அதற்கு விசேட முன்னுரிமை வழங்க முடியாதநிலைமை காணப்படுகிறது. யாப்புருவாக்கத்தில் அனைத்து இன மக்களும் பங்காளிகளாக வேண்டும்.

ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பொருளாதார பாதிப்புக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டது. அதன் பிரதிபலன் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. வழங்கிய வாக்குறுதிக்கமைய புதிய அரசியலமைப்பினை மக்களின் அங்கீகாரத்துடன் நிச்சயம் உருவாக்குவோம்.

பயங்கரவாத தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் கிடையாது. அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் விசேட நிபுணர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்த குழுவின் பரிந்துரைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படும். பயங்கரவாத தடைச்சட்டம் இந்த ஆண்டுக்குள் முற்றாக நீக்கப்படும் என்றார். (ம-7)


## வீடு வாடகைக்கு

No.732, ஆஸ்பத்திரி வீதி, ஸ்டேசன் சந்திக்கு அருகாமையில் சகல வசதியுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நேரில் பார்க்கலாம். (வெஸ்லி போட்டோ கொப்பி கடைக்கு முன்பாக)

தொடர்புகளுக்கு:- 077 284 4970, 076 021 7310, 076 601 5486 (7877)

## வீட்டு வேலைக்கு பணிப்பெண் (Housemaid) ஒருவர் தேவை

தேவைகள் (Requirements):

- இடம் : நெல்லியடிப்பகுதி (வடமராட்சி)
- வயது : 40-60 வயதுக்குள் இருக்க வேண்டும்.
- மாலை 7.00 மணி வரை வேலை செய்யக்கூடியவராக இருக்க வேண்டும்.
- சம்பளம் மற்றும் ஏனைய விபரங்கள் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு: 074 073 7596 (Call/ WhatsApp) (C-5880)

## பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்

2. வதந்திகளும் அரசியல் நிகழ்ச்சிநிரல்களும் உங்களை பயன்படுத்த விடாதீர்கள். வெறுப்புப் பேச்சு பெரும்பாலும் வதந்திகள், தவறான தகவல்கள் மற்றும் சமூகங்களைப் பிரிக்க முயலும் அரசியல் நோக்கங்களால் இயக்கப்படுகிறது.

ஏதேனும் தகவலை பகிர்வதற்கு முன் உங்களையே கேளுங்கள்: இதை யார் உருவாக்கினர்? ஏன் உருவாக்கினர்? இதனால் யாருக்கு பயன்?

பொறுப்புடன் நடந்து கொள்ளுங்கள். அமைதியைத் தெரிவு செய்யுங்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப்படுகிறது. (7775)

## மொத்தக் கொள்வனவு

அங்கர், யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.


1140/=

49/=

ஹப்பி சுப்பர்மாக்கட் (2434)
உரும்பிராய். 077 773 0900

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கி நின்று பணி புரிவதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (2433)

தொடர்பு: 077 217 3113

## கட்டட வேலையாட்கள் தேவை

கட்டட வேலைகளைச் செய்வதற்கு மேசன் வேலையாட்கள் தேவை. (C-5871)

தொடர்பு: 076 980 6787

## வேலைவாய்ப்பு

வாகன ரயர்கள் (சிறிய) பொருத்துதல் மற்றும் சீரமைத்தல் தொடர்பான தொழில் முன்அனுபவமுடையோர் தொடர்பு கொள்ளவும் (7874)

தொடர்பு: 076 232 9628

## பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல நிறுவனத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

1. உதவி முகாமையாளர் (நிர்வாகம்) - பெண்
2. முகாமைத்துவ உதவியாளர் - பெண்

| | |
|---|---|
| தகைமை | : க.பொ.த உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தி. |
| வயதெல்லை | : 23 - 45 வயது |
| நேர்முகத்தேர்வு | : 22.06.2026 தொடக்கம் 26.06.2026 வரை நேரம் காலை 9.00 மணி முதல் 1.00 மணிவரை |
| இடம் | : இல.758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |

தொடர்பு : 021 222 5102 (C-5869)

குறிப்பு : தகைமைக்கேற்ப சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

## வேலைவாய்ப்பு

எமது வெளியீட்டுக்கு Computer Typist தேவை. கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். (7858)

தொடர்பு: 077 711 1212

## வேலையாட்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் மொபைல் சொப்பில்

- விற்பனையாளர்
- திருத்துநர்
- பழக விரும்புவோர்

வயது : 18 - 21
சம்பளம் : 35,000, 40,000
இரு பாலாரும் (7859)

தொடர்பு: 077 199 6117

## திருமண சேவை

நீங்களும் உங்கள் அன்பான வாழ்க்கைத் துணையை பாதுகாப்பான முறையில் தெரிவு செய்து கொள்ளலாம். Unmaried, Divorce என்பன உண்டு. இலங்கைத் தமிழர்களின் திருமண சேவை.

மேலும் விபரங்களுக்கு:
Contact us via whatsApp +94776323154
Email - aishwaryamaishwaryam64@gmail.com (2432)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இருபாலையில் 60 பரப்புக் காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன்.
- இருபாலை சீ.சீ.தமிழ்க்கலவன் பாடசாலை 200 M தூரத்தில்.
- யாழ்.பருத்தித்துறை பிரதான வீதி இருபாலை சந்தி 1 Km தூரம்.
- யாழ்.நகரம் 6 Km தூரம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள நிலம். வீடுகள் கட்டுவதற்கு உகந்தது.
- ஒரு பரப்பின் விலை முன்பகுதி 1000000/= பத்து இலட்சம் முதல், பின்பகுதி ஆறு இலட்சம் ரூபாய் வரை.

பார்வையிடும் நேரம் :
நேரம் காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை

தொடர்பு : 077 988 6389, 076 077 2674, 077 288 0152 (7879)

## வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

நுணாவில் மேற்கு, சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக A9 Road அருகாமையில் வீரபத்திரர் வீதியில் வீட்டுடன் கூடிய 6 பரப்பும் 6 குளியும் கொண்ட காணி விற்பனைக்குண்டு

whatsApp இல் தொடர்பு கொள்ளவும்: (2431)
076 485 8020, +94777360995


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org